# சித்தமருத்துவ வெள்ளிவிழா மலர்

# 1984 - 2009







## யாழ் பல்கலைக்கழகம்

## கைதடி

# வெள்ளிவிழா மலர்

1984 - 2009

# SILVER JUBILEE

சித்தமருத்துவப்பிரிவு

யாழ். பல்கலைக்கழகம்,

கைதடி.

20.02.2011

# துணைவேந்தர் வாழ்த்துச் செய்தி



எங்கள் பாரம்பரியத்தின் தொன்மையான மருத்துவமரபாக சித்த மருத்துவம் நிலைபெற்றுள்ளது. இக்கலைஞானத்தை பல்கலைக்கழகக் கற்கை நெறியாகக் காக்கும் பேறு எம் பல்கலைக்கழகத்திற்கானது. இப் பண்பாட்டு மருத்துக் கல்வியின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் இவ்வேளை பெறுமதியானது.

சூழமைவின் நெருக்கடிகள், மட்டுப்பாடுகளின் மத்தியிலும் தளரா மனத்துடன் அர்ப்பணிப்பான சேவையினால் இக்கல்வியின் மேன்மையைக் காக்கும் சித்தமருத்துவத்துறை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்களின் பணி போற்றுதற்குரியது.

உயர்தகமை கொண்ட ஆசிரியர் குழாமும் அதிகரித்துவரும் மாணவர்களின் எண்ணிக்கையும் எங்கள் சுதேச மருத்துவக் கல்வியின் எதிர்கால மேம்பாடு தொடர்பான நம்பிக்கையினைத் தருவன. முழுதளாவிய மேம்பாட்டுக்கு உகந்தவகையில் எங்கள் சித்த மருத்துவத்துறையினை ஒரு பீடமாகக்காணும் எங்கள் நெடுநாட்கனவு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிசீலனையில் உள்ளமையும் எங்கள் மனதுக்குகந்த செய்தியாகும்.

சுய பண்பாட்டின் மேன்மைக்கான செழுங்கலை நியமமாய் எங்கள் சித்த மருத்துவக் கலைஞானத்தைக் காக்கும் பெரும் பணியில் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம். வெள்ளிவிழா வைபவத்தின் பதிவாக வெளிவரும் இவ்விதழின் ஆசிரியர்கள், இவ்விதழின் அழகையும் அர்த்தத்தினையும் காக்கும் துறைத்தலைவர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எங்கள் கல்வி மரபின் கனிகளாய் மருத்துவ உலகில் சுடர்விடும் பழைய மாணவர்கள், ஏனைய சித்த மருத்துவ சமூகத்தினர் அனைவருக்கும் எல்லையிலாத என் அன்பு வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன்**
துணைவேந்தர்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
16.02.2011



# சித்தமருத்துவப்பிரிவுத்தலைவர்

## ஆசிச் செய்தி

எமது சித்தமருத்துவத்துறை யாழ் மண்ணில் கால்பதித்து இருபத்தைந்து வருடங்கள் பூர்த்தியடைகின்ற இவ்வேளையில் நான் இங்கு மாணவியாக, விரிவுரையாளராக, தற்போது துறைத்தலைவராக இருந்து இத்துறையின் வரலாற்றினை கண்கூடாகப் பார்த்து ஆசியுரை வழங்குவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

வசதி வாய்ப்புக்கள் குறைந்த போதும், நாட்டிலே போர்மேகம் சூழ்ந்திருந்த போதும் கல்விச்செயல்பாடுகள் குன்றியிருந்த போதிலும் 200 இற்கு மேற்பட்ட பட்டதாரிகள் வெளியேறி இருப்பது பெருமைக்குரிய விடயமாகும். இதற்கு இதுவரை கடமையாற்றியதுணைவேந்தர்கள், துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், வழங்கிய ஒத்துழைப்பும், அனைவரினதும் அயராத உழைப்புமே காரணமாகும்.

தற்போதைய சமாதானச் சூழலில் துணைவேந்தர் அவர்களுடைய அர்ப்பணிப்புடன் கூடிய சேவையும் ஆக்கபூர்வமான செயல்பாடுகளினாலும் ஐந்து மாடிக்கட்டத்தின் அனுமதி கிடைக்கப்பெற்று இரண்டு வருடத்திற்குள் பூர்த்தியடைய உள்ளது. அத்துடன் அவர் எமது துறையின் தரம் உயர்த்தல் மற்றும் துறைசார்ந்த பல முக்கியமான விடயங்களை செயலாற்றுவதில் மிக ஆர்வமாக உள்ளார். அவருடைய முயற்சிகள் மேன்மேலும் கைகூட எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

உலகளாவிய ரீதியிலே மாற்று மருத்துவங்கள் பல பிரபல்யம் அடைந்து வருவதை ஊடக வாயிலாக அறிந்திருப்பீர்கள். சமகாலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூலிகையியலும் மருத்துவமும் சித்தர்களின் மெய்ஞ்ஞான வல்லமையினால் தெளிவுபெற இயம்பப்பட்டுள்ளதை நூல்கள், பட்டோலைகள், ஏடுகள் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

எமது துறையானது தற்போது புதிய பரிமாணாமங்களுடன் பல்வேறுபட்டதுறைசார் நிபுணர்களால் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தச் சூழ்நிலை எமது சித்த மருத்துவத்துறையினது வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான பசுமையான ஒளிக்கீற்றாக நான் பார்க்கின்றேன். இதற்கு உந்துதல் அளிப்பது போல எமது துறை மாணவமாணவிகளுக்கு விடுதி வசதி கிடைத்திருப்பது மேலும் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாகவிருக்கிறது.

இந் நிலையிலே எமது சித்தமருத்துத்துறையானது வளர்ச்சிப்பாதையை நோக்கிச் செல்வதற்கு எல்லாம் வல்ல இறைவனின் ஆசியை வேண்டி எனது ஆசியுரையை நிறைவு செய்கின்றேன்.

**வைத்தியகலாநிதி [திருமதி] தி.குமுதரஞ்சன்**

துறைத்தலைவர் சித்தமருத்துவப்பிரிவு

யாழ் பல்கலைக்கழகம்

# வெள்ளிவிழாக்குழுவின் மனத்திலிருந்து

யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவப்பிரிவு வெள்ளிவிழா ஏற்பாடுகள் குறித்து பட்டதாரிகள் ஆகிய நாம் கைதடி ஆயுர்வேதவைத்தியசாலையில் ஒன்றுகூடினோம். வெள்ளிவிழாசபை ஒன்று உருவாக்கப்பட்டு தலைவர், செயலாளர், பொருளாளர், மலர்வெளியீட்டுக்குழு, விழாஒழுங்கிணைப்புக்குழு, ஆலோசனைக்குழு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உரிய ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர்கள் என நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டு ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மானங்களாவன, இலங்கையில் எல்லாப்பாகங்களிலும், சர்வதேசத்திலும் உள்ள பட்டதாரிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டுடன்,அவர்களது கருத்துக்களும் பங்களிப்புகளும் பெற்றுக்கொள்ளப்பட்டது. இவ்விழாவை நடாத்துவதற்கு இக்குழு தமது செயற்பாட்டை தொடங்கி இன்று நிறைவேற்றி வைப்பதில் பெருமகிழ்வு அடைகிறது. இவ்விழாவிற்கு பட்டதாரிகள் தாமாக முன் வந்து தமது பங்களிப்பை வழங்கி விழாவிலும் கலந்து சிறப்பிக்கவிருப்பது மிக்க மகிழ்வைத்தருகிறது. இவ்விழா நடாத்தப்படுவதன் நோக்கங்களாவன, எல்லாப்பட்டதாரிகளும் தாங்கள் ஓடித்திரிந்து படித்து பட்டம் பெற்ற தமது தாய்வீட்டில் ஒன்றாகச்சந்தித்துச் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்துதலும், யாழ்பல்கலைக்கழக சித்தமருத்துவ வரலாற்றை வெள்ளிவிழாவாக கொண்டாடுதலும், ஆவனப்படுத்துவதுமாகும். அத்துடன் சித்தமருத்துவப்பிரிவில் இருபைத்தந்து வருடங்கள் சேவையாற்றியோரையும், இளைப்பாறிச் சென்றோரையும் கௌரவித்து மகிழ்வதாகும்., இந்நிகழ்வைச் செய்வது வருங்கால பட்டதாரிகளுக்கு ஒரு முன்மாதிரியாகத்திகழ்வதுமாகும். இவ்விழாவின் போது நாம் யாழ் பல்கலைக்கழகத்திடம் கேட்பது என்னவென்றால் சித்தமருத்துவத்துறை ஒரு பீடமாகவோ அல்லது நிறுவனமாகவோ உயர்ச்சி பெறவேண்டும். பல்கலைக்கழக பட்டப்பின் ஆய்வு பீடத்தில் சித்தமருத்துவத்தில் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட முன்னேற்பாடாக சித்தமருத்துவ விஞ்ஞான அமைப்பும் (Board of Siddha Medical Science) இசித்தமருத்துவ ஒழுக்கமீளாய்வுக்குழு (Siddha Ethical Review Committee) உருவாக்கப்படல் வேண்டும். சித்தமருத்துவத்தில் மாணவர்கள், பட்டதாரிகள் ஆய்வுகள் செய்து தேசிய,சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பிக்க ஏதுவாக ஆய்வுநிறுவனம் உருவாக்கப்படல் வேண்டும். இதன் மூலம் யாழ்பல்கலைக்கழக சித்தமருத்துவப்பிரிவு சர்வதேசத்துடன் இணைக்கப்பட்டு துரித வளர்ச்சியடைய வேண்டும் என்பது எமது அவாவாகும். பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு சித்தமருத்துவ பாடவிதானங்கள், நோய்நிதானிப்பதிலும், மருத்துவசிகிச்சையை சீராகச்செய்வதற்கும், மருந்துகளைதயாரிப்பதுடன் சந்தைப்படுத்துவதற்கும், ஆய்வுகள் செய்வதற்கும் ஆகிய நிலைமைகளுக்கு ஏற்றவாறு செயல்முறை விளக்கங்களுடன் பாடத்திட்டங்கள் அமைக்கப்படவேண்டும் என்று கருதுகிறோம். எமது சித்த மருத்துவ பட்டதாரிகள் விசேட சிகிச்சைப்பிரிவுகள் குழந்தை மருத்துவம், முறிவுநெரிவு மருத்துவம், பொது மருத்துவம், கண்மருத்துவம், காதுமூக்குதொண்டை,மானசீகரோகம்,பெண் மருத்துவம்,சித்தமருத்துவசிறுசத்திர சிகிச்சை, தோல்மருத்தும் எனும் சிறப்புச் சிகிச்சைப் பிரிவில் நிபுணத்துவம் பெறவேண்டும். அத்துடன் சித்த மருத்துவத்தில் பல்வைத்தியம், மிருகவைத்தியம் ஆகிய பிரிவுகளையும் சிறப்பாக இயக்கச்செய்யவேண்டும். சித்த மருத்துவபட்டதாரிகளுக்கு மாகாணசுதேச மருத்துவத்திணைக்களம், ஆயுர்வேதத்திணைக்களம், சித்தமருத்துவப்பிரிவு ஆகியன இணைந்து பயிற்சி பட்டறைகள் வருடந்தோறும் வழங்கப்படவேண்டும். துணைமருத்துவ சேவைகளுக்குரிய பயிற்சிகளும் வழங்குவதற்கு ஆவன செய்யப்படவேண்டும். இக்கனவு நனவாகும் என்பதே எமது எண்ணம்.

10.02.2011

யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவ வெள்ளிவிழா குழு.
கைதடி இலங்கை.

# மலர் வெளியீட்டுக்குழுவின் எண்ணத்திலிருந்து

சித்தமருத்துவ வெள்ளிவிழா மலரானது இன்று உங்கள் கைகளில் யாழ் பல்கலைக்கழகத்தன் சித்த மருத்துவத்தின் கடந்தகால வரலாற்றை தாங்கி வருகிறது. இம்மலர் வெளியீட்டுக்குழுவானது சித்தமருத்துவ பட்டதாரிகளிடமிருந்தும், நலன்விரும்பிகளிடமிருந்தும் இருபத்தைந்து வருட கால நிகழ்வுகளை ஆவனப்படுத்துவதற்கு, அதன் வரலாற்று ஆவணங்களை தந்துதவுமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஒரு சிலரிடமிருந்து கிடைத்த தகவல்களைக் கொண்டும், மலர் வெளியீட்டுக்குழுவும் சில தகவல்களைச் சேர்த்தும் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. இயலுமானவரை தரவுகளைச் சேர்த்திருக்கிறோம் இருந்தும் சில தரவுகள் விடுபட்டிருக்கலாம். கிடைக்கப்பெற்ற தரவுகளைக் கொண்டு ஒழுங்காக்கியிருக்கிறோம். இதில் ஏதாவது தவறுகள் காணுமிடத்தில் இவை எமது சக்திக்கு மீறிய ஒன்றாகவே கருதுகிறோம். உங்கள் விமர்சனம் ஒரு இளம் பயிருக்கு கொடுக்கின்ற நீராக இருக்கவேண்டும். அது ஒரு கோடையாகவோ அல்லது வெள்ளப்பெருக்காகவோ இருக்கக்கூடாது என வேண்டிநிற்கின்றோம். இம் மலருக்கு ஆசிச்செய்தியை வழங்கிய துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன், துறைத்தலைவர் டாக்டர் (திருமதி) தி. குமுதரஞ்சன் அவர்களுக்கும், இந்நூலிற்கு பெரும்பாலான தரவுகளை தனது வேலைப்பழுவின் மத்தியிலும் தந்துதவிய பேராசிரியர் சு. பவானி அவர்களுக்கும், மற்றும் சித்த மருத்துவத்துறை விரிவுரையாளர்கள். மாணவர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், பட்டதாரிகள், நலன்விரும்பிகள் ஆகியோருக்கும், இவ்விழாவை இனிதாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய அனைத்துள்ளங்கள், இந் நூலை வடிவமைத்துத்தந்த ஸ்ரீசாயி அச்சகத்தினர், இவ்விழாவின் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ள விருந்தினர்கள் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளை உவகையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வைத்திய கலாநிதி (திருமதி) க. சௌந்தரராஜன்
வைத்திய கலாநிதி க. ஸ்ரீதரன்
வைத்திய கலாநிதி ச. கணேசன்
சித்தமருத்துவ வெள்ளிவிழா மலர் வெளியீட்டுக்குழு

16.02.2011

# சித்த மருத்துவ வெள்ளிவிழா சபை உறுப்பினர்கள்


தலைவர் : *Dr.* ஐ. ஜெயநாயகணேசன்
செயலாளர் : *Dr.* க. சிவராஜா
பொருளாளர் : *Dr.* க. செல்வநாதன்

மலர் வெளியீட்டுக்குழு:-
1. *Dr.* (திருமதி) க.சௌந்தரராஜன்
2. *Dr.* க. ஸ்ரீதரன்
3. *Dr.* ச.கணேசன்

விழாஒழுங்கமைப்புக்குழு:
1. *Dr.* த. சத்தியசீலன்
2. *Dr.* (திருமதி) ப.செல்வராசா
3. *Dr.* ப. சுரேசன்
4. *Dr.* க. நடேசராஜன்
5. *Dr.* ந. ஐங்கரன்
6. *Dr.* ம. பகிரதன்
7. *Dr.* (திருமதி) க. சிவமோகன்

ஆலோசனைக்குழு:
1. பேராசிரியர் சு.பவானி
2. *Dr.* (திருமதி) நி. குமுதரஞ்சன்
3. *Dr.* சே. சிவசண்முகராஜா
4. *Dr.* (திருமதி) சி. துரைரட்ணம்
5. *Dr.* (திருமதி) வி. செல்வநாதன்
6. *Dr.* ந. வர்ணகுலேந்திரன்

ஒருங்கிணைப்புக்குழு:
1. *Dr.* (திருமதி) சு. சிவசுதன்(வவுனியா)
2. *Dr.* தி. சுதர்மன் (திருகோணமலை)
3. *Dr.* தி. ராகுலன் (மட்டக்களப்பு)
4. *Dr.* சோ. கனகசுந்தரம் (மன்னார்)




**இருப்பவர்கள்: இடமிருந்து வலம்**

Dr. க. ஸ்ரீதரன், Dr. சௌ. கலைச்செல்வி, Dr. க. சிவராஜா, Dr. கு. திலகேஸ்வரி, Dr. ஐ. ஜெபநாமகணேசன், பேராசிரியர் Dr. சு. பவானி, Dr. சே. சிவசண்முகராஜா, Dr. ச. கணேசன்

**நிற்பவர்கள்: இடமிருந்து வலம்**

Dr. க. செல்வநாதன், Dr. கா. நடேசராசன், Dr. ம. பகீரதன், Dr. ப. சுரேசன், Dr. க. ஐங்கரன்.

**ஏனையோர்:** Dr. து. சியாமா, Dr. ந. வர்ணகுலேந்திரன், Dr. செ. விக்னவேணி, Dr. சி. சுமதி, Dr. தி. சுதர்மன், Dr. தி. ராகுலன், Dr. சோ. கனகசுந்தரம், Dr. செ. பவளராணி, Dr. சி. கஜமாலா.



# வெள்ளிவிழாக்காணும்
# யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவப்பிரிவின்
# வரலாற்று பதிவுகள்

1983ம் ஆண்டு யூலை மாதம் எங்கள் நாட்டில் ஏற்பட்ட துர்அதிஷ்டவசமான நிகழ்வுகளினால் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உள்நாட்டு மருத்துவ நிறுவகத்தில் கல்வி பயின்ற சித்தமருத்துவப் பிரிவைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர். மீண்டும் கொழும்பு சென்று தமது கல்வியை தொடரக்கூடிய சூழ்நிலை சாத்தியமானதாக இருக்கவில்லை. இச்சந்தர்ப்பத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசியரியர் ஸ்ரான்வி கல்பகே அவர்கள் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசியரியர் சு. வித்தியானந்தன் அவர்களிடம் சித்த மருத்துவத்துறையை யாழ் பல்கலைக்கழகத்தில் உள்வாங்கி செயற்படுத்தும் ஆலோசனையை அறிவித்தார். யாழ். பல்கலைக்கழக மூதவையும் பேரவையும் அதனை ஆமோதித்தது.

கொழும்பில் 1929ம் ஆண்டு முதல் ஆயுள்வேத மருத்துவப் பிரிவு, யூனானி மருத்துவப் பிரிவுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டு வந்த சித்தமருத்துவப்பிரிவு 1984ம் ஆண்டு யூலை மாதம் 2ம் திகதி யாழ் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டது. கொழும்பு பல்கலைக்கழகத்தின் உள்நாட்டு மருத்துவ நிறுவனத்தின் பதில் அத்தியட்சகராக இருந்த பேராசியர் நந்ததாச கோதாகொட சித்தமருத்துவப்பிரிவு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பிரிந்து செல்வது ஒரு மகிழ்ச்சிகரமான விடயமல்ல என்றும் சுதேச மருத்துவத்துறைக்கு ஏற்பட்ட ஒரு வரலாற்று பலவீனம் எனவும் சித்தமருத்துவத்துறையினருக்கு ஒழுங்கு செய்யப்பட்ட பிரியாவிடை வைபவத்தின் போது குறிப்பிட்டதுடன் சித்தமருத்துவத்துறைத் தலைவர் டாக்டர்.சு. பவானி அவர்கள் தங்களுடன் ஒத்துழைத்து சுதேச மருத்துவ நிறுவனத்தின் முன்னேற்றதிற்காக செயற்பட்டதையும் இலகுவில் மறந்துவிடமுடியாதெனவும் குறிப்பிட்டார்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவப்பீடமும், விஞ்ஞானப்பீடமும் தங்கள் பீடங்களின் கீழ் சித்தமருத்துவத்துறையை செயற்படவைப்பதில் பல சிரமங்களை எதிர்கொள்ளவேண்டி இருப்பதாக தங்கள் கருத்துக்களை சமர்ப்பித்தனர்.பின்னர் கலைப்பீடத்தின் கீழ் சித்தமருத்துவத்துறை ஒரு துறையாக உள்வாங்கப்பட்டது. விஞ்ஞான பூர்வமான மருத்துவக் கல்வி கலைப்பீடத்தின் கீழ் செயற்படலாயிற்று, யாழ்ப்பாண மக்களின் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றுடன் இணைந்த சித்தமருத்துவம் யாழ் மண்ணில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டது காலத்தின் நிறைவான கணிப்பு என அறிஞர்களும், மக்களும் மாணவர்களும் மகிழ்ச்சியடைந்தனர்.

1984ம் ஆண்டில் சித்தமருத்துவத்துறை யாழ் பல்கலைக்கழத்திற்கு மாற்றப்பட்டபோதும் அதன் செயற்பாடுகள் கைதடியில் அமைந்துள்ள ஆயுள்வேத திணைக்களத்திற்கு சொந்தமான கட்டடத்தில் 1985ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன், கலைப்பீடாதிபதி பேராசிரியர் மு. இந்திரபாலா பதிவாளர் V. N சிவராசா ஆகியோர் சித்தமருத்துவத்துறைக்கு தேவையான அடிப்படைவசதிகளை நிறைவேற்றுவதில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டனர். சித்தமருத்துவத்துறைத் தலைவர் டாக்டர். சு. பவானி அவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசியர் ஸ்ரான்லி கல்பகே கொழும்பு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரான்லி விஜயசுந்தர ஆகியோரிடம் கலந்துரையாடி சித்தமருத்துவப் பிரிவினரால் பாவிக்கப்பட்ட தளபாடங்கள், மருத்துவ நூல்கள், ஆகியவற்றை யாழ்ப்பாணத்திற்கு கொண்டுசெல்வதற்கான அனுமதியை பெற்றதுடன் உள்நாட்டு நிறுவகத்தின் நிதியிலிருந்து ரூபா இரண்டு லட்சத்தையும் யாழ் பல்கலைக்கழகத்திற்கு மாற்றுவதற்கான அனுமதியையும் பெற்றார்.

சித்தமருத்துவ சத்திரசிகிச்சைமானி (BACHELOR OF SIDDHA MEDICI NE AND SURGERY) பட்டப்படிப்பின் காலம் ஐந்து வருடங்களாக இருந்ததுடன் இறுதி ஆண்டு பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் ஒரு வருட ஆரோக்கிய சாலை உள்ளகப் பயிற்சியை (Internship) மேற்கொள்ளவேண்டியும் இருந்தது. அத்துடன் நிறுவன அந்தஸ்துடன் இருந்த சித்தமருத்துவப் பிரிவு கலைப்பீடத்தின் கீழ் ஒரு துறையாக இயங்க ஆரம்பித்தது.

சித்தமருத்துவப்பிரிவில் கொழும்பில் இறுதி ஆண்டு பரீட்சைக்கு தோற்ற இருந்த மாணவர்களுக்கு உள்நாட்டு மருத்துவ நிறுவகம் யாழ் பல்கலைக்கழகத்தின். அனுமதியுடன் அவர்களுக்கான பரீட்சைகளை 1985ம் ஆண்டின் ஆரம்பத்தில் கைதடியில் நடாத்தியது. இது தவிர கொழும்பில் கல்வி கற்ற முதலாம் வருட B.S.M.S. மாணவர்களும் இறுதி வருட D.A.M.S. மாணவர்களும் கைதடியில் அமைந்த சித்த மருத்துவப் பிரிவில் தங்கள் கல்வியைத் தொடர்ந்தனர் .

கொழும்பிலிருந்து சித்த மருத்துவபிரிவு விரிவுரையாளர்களான டாக்டர் S. அருணாசலம், டாக்டர் T. குணரத்தினம், டாக்டர் S. திருநாவுக்கரசு டாக்டர் S. பவானி, டாக்டர் (திருமதி) .மிதிலைச்செல்வி ஸ்ரீகாந்தன் ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கு வந்து விரிவுரைகளை ஆரம்பித்தனர் துணைவேந்தர் பேராசிரியர், சு. வித்தியானந்தன், பதிவாளர் V.N. சிவராசா, நிதியாளர் திரு S. ஆலாலசுந்தரம் அவர்கள் சித்த மருத்துவத்துறை செயற்படுவதற்கான அடிப்படை வசதிகளை அவ்வப்போது நிறைவேற்றி வைத்தனர் துணைவேந்தர் பேரவையின் அனுமதியுடன் டாக்டர் சு. பவானியை சித்த மருத்துவத்துறைத் தலைவராக நியமித்தார்.

சித்த மருத்துவத் துறையின் கல்விச் செயற்பாட்டிற்கு போதிய வழங்கள் இல்லாது இருந்தமையினால் யாழ் பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடம், கலைப்பீடம், யாழ் பொது வைத்தியசாலை ஆகிய நிறுவனங்களுடன் சித்த மருத்துவத் துறைத் தலைவர் கலந்துரையாடி விரிவுரைகளை மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளுடன் செயற்படுத்தினார்.

மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் C.சிவஞானசுந்தரத்தின் அனுமதியுடன் உடற் தொழிலியல், உடற் கூற்றியல், நீதி மருத்துவம், பிணியியல், சமூக மருத்துவம் போன்ற பாடங்களுக்கு பேராசிரியர் S. பரமேஸ்வரன், டாக்டா ராஜினி திரணகம, டாக்டர் K. சிவபாலன், டாக்டர் K. ராஜ்குமார், பேராசிரியர் C. சிவஞானசுந்தரம், டாக்டர் N. சிவராஜா, டாக்டர் S. நச்சினார்க்கினியன், டாக்டர் திருமதி. நாகேஸ்வரன், டாக்டர் கிருஷ்ணராஜா, டாக்டர் S. ஈஸ்வரதாஸ்,பேராசிரியர் ந.சரவணபவானந்தன் ஆகியோரை பகுதி நேர விரிவுரையாளர்களாக நியமிக்க துறைத்தலைவர் ஒழுங்குகள் மேற்கொண்டார்.

அதேபோல் தமிழ் துறைத்தலைவர் பேராசிரியர் S. வேலுப்பிள்ளை மற்றும் கலைப் பீடாதிபதியின் அனுமதியுடன் உயர் தமிழ் கற்பிக்க திரு. K. நாகேஸ்வரன்,திரு. E. பாலசுந்தரம் போன்ற விரிவுரையாளர்களின் உதவியை பெற்றுக் கொண்டார். அதேபோல் யாழ். பொது வைத்தியசாலையில் பணிபுரிந்த டாக்டர் S. பத்மநாதன் டாக்டர் செல்வி P. சின்னப்பா டாக்டர் திருமதி அரவிந்தன் டாக்டர் திருமதி பிரபாகரன் போன்றோரின் உதவியுடன் பிணியியல் விரிவுரைகள் நடைபெற்றன.

பேராசிரியர்மு.இந்திரபாலாவை தொடர்ந்து பேராசிரியர் N. பாலகிருஸ்ணன் கலைப்பீடாதிபதியாக நியமிக்கப்பட்டார். 1985ம் ஆண்டின் யாழ் பல்கலைக்கழக ஐந்து ஆண்டு செயற்திட்டத்தில் (CORPORATE PLAN 1985) சித்தமருத்துவத்துறை ஒரு நிறுவனமாக்கப்படவேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. 1985ம் ஆண்டு BS.M.S. படிப்பிற்கான இரண்டாம் அணி மாணவர்கள் யாழ் பல்கலைக் கழகத்தினால் விளம்பரப்படுத்தி நேர்முகப் பரீட்சை மூலம் 42க்கும் அதிகமான மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இதே வருடத்தில் சித்த மருத்துவத்துறை விரிவுரையாளர்களான டாக்டர். S. அருணாசலம், டாக்டர் T. குணரத்தினம் ஆகியோர் ஓய்வுபெற்றனர். யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து திருமதி மு. உருத்திரசுந்தரம், திரு. மு. பாலசுந்தரம் இருவரும் கல்விசாரா உத்தியோகத்தர்களாக சித்தமருத்துவத்துறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

யாழ் மண்ணில் தமிழரின் கலாச்சாரம், பண்பாட்டுடன் பின்னிப்பிணைந்த சித்தமருத்துவம் நன்கு வளர்ச்சியடையும் என்பது பல அறிஞர்களினது எதிர்பார்ப்பாக அமைந்தது. தமிழரின் பண்பாட்டை தன்னகத்தே கொண்டுள்ள பரதம், இசை, நாடகம், பாரம்பரிய மருத்துவம் ஆகிய கலைகள் இந்த மண்ணில்

அன்றி வேறு இடத்தில் வேரூன்றி வளர்வது உசிதமானதல்ல என்பதனை சேர் பொன்னம்பலம் இராமநாதன் முன்னரே குறிப்பிட்டிருந்தமை நினைவுகூர வேண்டிய தீர்க்கதரிசனமாகும். அவருடைய அன்பளிப்பினால் பரம்பரையாக பேணப்பட்டு வளர்ந்த திருநெல்வேலி பரமேஸ்வரன் சந்நிதியில் நிறுவப்பட்டுள்ள பரமேஸ்வராக் கல்லூரி கட்டடத்தில் யாழ் பல்கலைக்கழகம் அமைந்ததும் அதில் ஒரு துறையாக சித்தமருத்துவத்துறை அமைந்ததும் ஒரு இன்றியமையாத சக்தியின் பலன் என்பதை எமக்கு உணர்த்துகின்றது.

சித்தமருத்துவத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து படிப்படியாக கற்பித்தல் உபகரணங்கள் காரியாலய உபகரணங்கள் ஆகியவை முறையே வெளிநாட்டிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் கொள்வனவு செய்யப்பட்டு சித்தமருத்துவத்துறை வளர்ச்சிப்பாதையில் அடி எடுத்துவைத்தது.

ஆரம்பத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்து வந்த மக்கள் சித்த மருத்துவத்துறையில் அடைக்கலம் புகுந்திருந்தமையால் கல்விச்செயற்பாடுகள் ஒரு சிறிய இடத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்னா அவர்கள் வெளியேறியதும் கட்டடம் திருத்தப்பட்டு பல்கலைக்கழகத்தால் கிணறு, தண்ணீராதங்கி அமைக்கப்பட்டு சுற்றுமதிலும் கட்டப்பட்டது. பின்வரும் துறைகளும் ஆரம்பத்தில் அமைக்கப்பட்டது.

1. உடற்கூற்றியல் பகுதி (Anatomy Section) இதற்குரிய உபகரணங்கள், பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் பிரேதங்களை பாதுகாக்கும் அறை, பிரேதங்களை வெட்டி படிப்பதற்கான மண்டபம் தண்ணீர்வசதிகள் ஆகியவை மறுசீரமைக்கப்பட்டன.

2. உடற்தொழிலியற் பகுதி (Physiology Section) இதற்குரிய உபகரணங்கள்(நுணுக்குக்காட்டி(Microscope)உபகரணங்கள் வரைபடங்கள்) பெற்று செய்முறைப்பயிற்சிக்கான வசதிகள் அமைக்கப்பட்டன.

3. குணபாடம்:- மூலிகைப்பிரிவு (Materia medica Section)

மூலிகைகளை இனம் காண்பதற்காக சித்தமருத்துறையில் எஞ்சியிருந்த நிலப்பகுதியில் கற்கள் கிளறப்பட்டு செம்மண் நிரப்பப்பட்டு மூலிகைத்தோட்டம் அமைக்கப்பட்டது. அத்துடன் 100 சீமேந்து சாடிகள் வேண்டப்பட்டு மூலிகைகள் வளர்க்கப்பட்டன. இந்த பாடம் சம்பந்தமான உபகரணங்கள் வெளிநாட்டிலிருந்து பெறப்பட்டது.

4. ஔடத பாகசாலை (Pharmacy Section) மாணவர்களின் மருந்து செய்பயிற்சிக்கான உபகரணங்கள் (அம்மி, குழவி, உரல், உலக்கை போன்றவை) பெறப்பட்டன. சில உபகரணங்கள், நூல்கள் நலன்விரும்பிகள் சிலரால் அன்பளிப்பு செய்யப்பட்டது.

5. யாழ். கச்சேரியில் திட்டமிடற்பணிப்பாளராக கடமையாற்றிய திரு. S. சிவதாசன் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ரூபா மூன்று லட்சத்தை இரு தவணைகளில் தந்து நூலகத்திற்கு தேவையான நூல்கள் அலுமாரிகளை வேண்டுவதற்கு உதவினார்.

6. யாழ். பல்கலைக்கழக நூலக பொறுப்பாளர் திரு. முருகவேள் அவர்களின் ஆதரவுடன் கைதடி சித்தமருத்துவத்துறையில் நூலகம் ஒன்று அமைக்கப்பட்டு துணைவேந்தர் பேராசியரியர் சு. வித்தியானந்தன் அவர்களினால் திறந்துவைக்கப்பட்டது. மாணவர்களின் முக்கிய தேவைகளுள் ஒன்றான 'நூலகம்' அமைக்கப்பட்டது மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது.

7. திரு. நவசிவாயம் என்னும் சித்தமருத்துவ ஆதரவாளர் சித்தமருத்துவத்தில் ஆய்வுகள் மேற்கொள்வதற்காக மூன்றுலட்சம் ரூபா நிதியை பல்கலைக்கழக சார்பில் நிலையான வைப்பில் இட்டு அதன் வட்டிப் பணத்தில் சித்தமருந்துகள் எந்தநோய்களுக்கு விரைவான குணம் அளிக்கின்றதென ஆய்வு செய்யுமாறு பணித்தார்.

8. மாணவர்கள் தங்கள் கல்விச் செயற்பாடுகளை பூரணப்படுத்த சில வசதிகள் இல்லாததை உணர்ந்த துறைத்தலைவர் சு. பவானி அவர்கள் பேராதனை தாவரவியற் பூங்காவின் அத்தியட்சகரின் அனுமதி பெற்று மூலிகைகளை இனம் காண்பதற்காக கண்டி பேராதனை தாவரவியற்பூங்காவிற்கும், நாவின்னை ஆராய்ச்சி நிலையத்திலுள்ள மூலிகை தோட்டம் ஆகிய இடங்களுக்கும் மாணவர்களை கூட்டிச்சென்று கல்விச்செயற்பாடுகளை பூரணப்படுத்தினார்.

பேராசியரியர் சு. வித்தியானந்தன் துணைவேந்தராக இருந்தபோது, துறைத்தலைவர் பட்டப்பின் படிப்பின் முக்கியத்துவத்தை அவரிடம் கூறி அதற்கான ஆயத்தங்களை செய்து தருமாறு வேண்டினார். அதன் பயனாக அவர் தமிழ்நாட்டின் மதுரை, தஞ்சாவூர் பல்கலைக்கழகங்களுடன் தொடர்புகொண்டு துணைவேந்தராக இருந்த பேராசியர் S. சுப்பிரமணியம் அவர்களுடன் தொடர்புகொண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் சித்தமருத்துவத்துறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதையும் அதன் பட்டதாரி மாணவர்களுக்கு பட்டப்பின்படிப்பிற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கடிதம் எழுதினார்.

1985ம் ஆண்டில் சித்தமருத்துவத்துறைக்கு விரிவுரையாளர்களாக டாக்டர் திருமதி S. சிவபாலன், டாக்டர் திருமதி J. கதிர்வேல், டாக்டர் திருமதி G.A. பவானி, டாக்டர் செல்வி S. கந்தையா ஆகியோர் நியமிக்கப்பட்டனர். ஒளடதபாகவிதி சம்பந்தமான விரிவுரைகளை வழங்குவதற்கு பகுதிநேர விரிவுரையாளர்களாக டாக்டர் S.A. குஞ்சிதபாதம் டாக்டர் ஜே. பிலிப்ஸ் டாக்டர் வ. சின்னப்பு ஆகியோர் நியமிக்கப்பட்டனர். டாக்டர் திருமதி J. கதிர்வேல்

அவர்கள் தனது சொந்த காரணங்களுக்காக விரிவுரையாளர் பதவியிலிருந்து விலகிக்கொண்டார். இவரின் வெற்றிடத்திற்கு 1987ல் டாக்டர் செல்வி சிவஞானமணி சுப்பிரமணியம் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.

1987ல் இந்திய இராணுவம் எமது சித்தமருத்துவத்துறையில் தங்கியிருந்ததனால் கல்விச் செயற்பாடுகள் சில காலம் தடைப்பட்டிருந்தது. எமது தளபாடங்கள் சில அவர்களின் பாவனைக்காக எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் யாழ்ப்பாணத்திற்கு பொறுப்பான இராணுவ அதிகாரியுடன் துறைத்தலைவர் தொடர்பு கொண்டு அவைமீளவும் பெறப்பட்டன.

மாணவர்களின் ஆரோக்கியசாலைப் பயிற்சியை கைதடி ஆயுள்வேத ஆரோக்கியசாலையில் மேற்கொள்வதற்கான வசதிகளையும், அனுமதியையும் வழங்குமாறு சுதேசமருத்துவ அமைச்சின் செயலாளர் திரு. P.B. வேரகொட அவர்களுடன் துறைத்தலைவர் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் பயனாக 1988ல் கொள்கை அளவில் மாணவர்களுக்கு பயிற்சியை வழங்கும் போதனாவைத்தியசாலையாக கைதடி போதனா வைத்தியசாலை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் துணைவேந்தராக இருந்தபோது அவர் எடுத்த முயற்சியின் பலாபலனாக முதல் முதலாக டாக்டர் திருமதி மி ஸ்ரீகாந்தன் அவர்கள் பாளயங்கோட்டை சித்தமருத்துவக்கல்லூரிக்கு (மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்தது) MD(S) பட்டமேற்படிப்பிற்காக 1989ல் இந்தியா சென்றார்.

சித்தமருத்துவத்துறை மாணவர்கள் 1985ம் ஆண்டிலிருந்து தங்கள் நலன்களை பேணவும், சித்தமருத்துவத்தை மக்கள் மத்தியில் பரப்பவும் கண்காட்சிகளை ஒழுங்குசெய்தும், "சித்தமருத்துவம்" என்னும் சஞ்சிகையை வெளியிட்டும் சித்தமருத்துவமாணவர் மன்ற நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் இரண்டு நாட்களும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் மூன்று நாட்களும் நடைபெற்ற கண்காட்சிகள் மக்கள் மத்தியில் சித்தமருத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியதென்றால் மிகையாகாது.

1988ம் ஆண்டில் BSMS இறுதிவருட மாணவர்களுக்கு கொழும்பில் உள்ள தொற்றுநோய் வைத்தியசாலை (I.D.H) புற்றுநோய் வைத்தியசாலை (Maharagama) காசநோய்வைத்தியசாலை (Welisara) பாலியல் தொற்றுநோய் பகுதி, கொழும்புவைத்தியசாலை (De Saram Place), குஷ்டரோகம்;(Leprosy Clinic G.H.) ஆகிய இடங்களில் விஷேடநோய்களை நிச்சயிப்பதற்கான விரிவுரைகள் மேலைத்தேச வைத்தியர்களால் போதிக்கப்பட்டதுடன் அது சம்பந்தமான ஆய்வுகூடப் பரிசோதனைகளும் (Laboratory Investigation) அறிவுறுத்தப்பட்டது. அதேசமயம் பொரளை மத்திய ஆயுள்வேத வைத்தியசாலையிலும், பயிற்சியுடன் விரிவுரைகளையும் நடைபெற்றன..

1989ம் ஆண்டில் இறுதிவருட B.S.M.S. மாணவர்களுக்கான பரீட்சை நடைபெற்றது. முதலாவது அணி மாணவர்களான இவர்களில் இருவர் முதலாம் வகுப்பில் சித்தி எய்தினார்கள். உள்ளகப் பயிற்சி கொழும்பிலுள்ள ஆயுள்வேத வைத்தியசாலை, மற்றும் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை ஆகிய இடங்களில் வழங்கப்பட்டது. கொழும்பில் உள்ளகப் பயிற்சி நடைபெறுவதால் சித்தமருத்துவ பட்டதாரிகள் சிங்களமொழியை பேசப்பழகுவதுடன் ஆயுள்வேத யூனானி மருத்துவஅறிவையும், சமூகங்களிடையே ஒற்றுமையையும் ஏற்படுத்த முடியுமென சுதேசவைத்திய அமைச்சின் செயலாளர், ஆயுள்வேத ஆணையாளர் ஆகியோருடன் சித்தமருத்துவத்துறைத் தலைவர் கலந்துரையாடி உள்ளகபயிற்சியை கொழும்பில் உள்ள மத்திய ஆயுள்வேத வைத்தியசாலையிலும் நாவின்னையிலும் வழங்க ஏற்பாடுகள் செய்தார். உள்ளகப் பயிற்சியை மேற்கொண்டிருந்த செல்வி கலாநாயகி சிங்கநாயகம் கைதடியில் வாகனவிபத்து ஒன்றில் சிக்கி அகாலமரணமானார். அவர் மரணதிற்கு காரணமாக இருந்த வாகன உரிமையாளர் செல்வி கலாநாயகி அவரின் தாயாரிடம் ஒருதொகை பணத்தை வழங்கினார். அந்த பணத்தை அன்னாரின் தாயாரின் விருப்பப்படி யாழ் பல்கலைக்கழக வைப்பு நிதியில் இடப்பட்டு ஒவ்வொரு வருடமும் அதனால்பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து இறுதி B.S.M.S. பரீட்சையில் முதல் நிலையில் சித்திபெறும் மாணவருக்கு கலாநாயகி சிங்கநாயகம் நினைவுப் பரிசில்' என வழங்கப்பட்டு வருகின்றது. அதேபோல் இரண்டாம் வருடத்தில் 'குணபாடம்' என்னும் பாடத்தில் அதிக புள்ளிகள் பெறும் மாணவருக்கு வருடாந்தம் கலாநாயகியின் நினைவுப் பரிசில் வழங்கப்பட்டு வருகின்றது. முதலாம் அணி மாணவர்களில் செல்வி வசந்தி தேவராசாவும் செல்வன் வே. சிவசண்முகராஜாவும் முதலாம் வகுப்பில் சித்தியெய்தினார். அந்த வருடத்தின் கலாநாயகி சிங்கநாயகம் நினைவுப்பரிசில் செல்வி வசந்தி தேவராசாவிற்கு வழங்கப்பட்டது. அவருக்கு கொடுக்கப்பட்ட மிகுதிப் பணத்தில் 40 கதிரைகள் கலாநாயகியின் நினைவாக வேண்டப்பட்டது.

1990ம் ஆண்டில் முதலாம் அணி மாணவர்களின் ஒரு வருட உள்ளகப் பயிற்சி முடிவடைந்தது. இருந்த சமயத்தில் கைதடி ஆயுள்வேத ஆரோக்கியசாலையில் வைத்திய உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை நில்வியது. இதை உணர்ந்த சித்த மருத்துவத் துறைத்தலைவர் செஞ்சிலுவை சங்கத்தலைவர் டாக்டர் R. தெய்வேந்திரனுடன் கலந்துரையாடி உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்த நான்கு மாணவர்களுக்கு 15.06.1990ல் தற்காலிக வைத்திய உத்தியோக்தர் பதவியை சம்பளத்துடன் கைதடி போதனா வைத்தியசாலையில் வழங்குவதற்கு ஆக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். 1990ம் ஆண்டில் பேராசியர் . அ. துரைராஜா அவர்கள் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார் மாணவர்களின் மகப்பேற்றியல் செய்முறைப் பயிற்சிக்காக சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை. பொம்மை வெளி கற்பிணி பராமரிப்பு நிலையம், மடத்தடி கற்பிணிபராமரிப்பு நிலையம், போன்ற இடங்களுக்கு சென்று வருவது சிரமம் என உணர்ந்த துறைத்தலைவர் டாக்டர் S. பவானி, பிராந்திய

சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் கே. கனகசபை அவர்களுடன் கலந்துரையாடி, ஆயுள்வேத ஆணையாளர், சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர் ஆகியோரின் அனுமதியையும் பெற்று மகப்பேற் விடுதியை கைதடி ஆயுள்வேத ஆரோக்கிய சாலையில் 1990ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் திகதி டாக்டர் க. இராமசாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது பேராசியர் A. துரைராஜா, பேராசியர் C. சிவஞான சுந்தரம் மற்றும் யாழ் பல்கலைக்கழகத்தின் உத்தியோகத்தர்கள், டாக்டர் திருமதி மனோரஞ்சிதம், தவத்துரை (கைதடி ஆயுள்வேத ஆரோக்கியசாலை பொறுப்பதிகாரி) வைத்திய உத்தியோகத்தர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் சகலரும் கலந்து மகப்பேற்றியல் விடுதி திறப்புவிழாவை சிறப்பித்தனர். டாக்டர் S. சபாநாதன் அவர்கள் சித்தமருத்துறையினரால் ஒழுங்குசெய்யப்பட்ட மகப்பேற்றுவிடுயில் தனது சேவையை எந்தவித சம்பளமும் பெறாமல் தொடர்ந்து ஆற்றிவந்தார் என்பது விசேடமாக குறிப்பிடவேண்டிய அம்சமாகும். Dr. N. கனகசபை, Dr. S. சிவபாதம், Dr. R. தெய்வேந்திரன் ஆகியோர் மகப்பேற்று விடுதிக்கான உபகரணங்கள், மருந்துகள், ஆகியவற்றை தந்து உதவியதுடன் பலவழிகளிலும் மகப்பேற்று விடுதி திறந்து மக்களுக்கு சேவைசெய்ய வேண்டுமென்ற நோக்கில் சகல ஒத்துழைப்பையும் எமக்கு தேவையான நேரங்களில் தொடர்ந்து செய்துவந்தனர். மாணவரின் கல்விச் செயற்பாட்டிற்கு மகப்பேற்று விடுதி அமையப் பெற்றது ஒரு மைல்கல்லாக விளங்கியது என்றால் மிகையாகாது.

கலைப்பீடாதிபதி பேராசியர் N. பாலகிருஷ்ணனை தொடர்ந்து 1991ம் ஆண்டு மார்ச் மாதம் பேராசிரியர் P. பாலசுந்தரம்பிள்ளை கலைப்பீடாதியாக நியமிக்கப்பட்டார். யாழ் பல்கலைக்கழகத்தின் 5 ஆண்டு திட்டதிற்கு அமைய சித்தமருத்துவத்துறையை ஒரு நிறுவனமாக்க வேண்டும் என்ற நோக்கில் கலைப்பீடம் தனது 4.6.1991ல் நடைபெற்ற சபைக்கூட்டத்தில் சித்தமருத்துவத் துறையை நிறுவகமாக்க வேண்டுமென்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி அதனை மூதவைக்கும் சிபார்சு செய்தது.மூதவை தனது 30.07.1991ல் நடைபெற்ற மாதாந்தக்கூட்டத்தில் ஏக மனதாக இந்தவிடயத்தை ஆமோதித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சித்த மருத்துவத் துறையை நிறுவகமாக்கும்படி 1991ல் கோரிக்கை விடுத்தது:கலைப்பீட சபைக்கூட்டத்தில் கலந்துகொண்ட சித்த மருத்துவத்துறை விரிவுரையாளர்கள் அனைவரினதும் ஒட்டுமொத்தமான பங்களிப்பு இருந்ததுடன் நிறுவகமாக்கும் கோரிக்கை ஏகமனமாக நிறைவேற்றப்பட்டதும் குறிப்படத்தக்கது.

கலைப்பீடத்தின் கீழ் சித்தமருத்துவத்துறை தொடர்ந்து இயங்குவதில் சில பிரச்சனைகள் தோன்றுவதை கலைப்பீடாதிபதி பேராசியர் P. பாலசுந்தரம்பிள்ளை அவர்களுக்கும் துணைவேந்தர் பேராசிரியர் A. துரைராஜா ,அவர்களுக்கும், துறைத்தலைவர் எடுத்துகூறினார். அதன் பிரகாரம் பல்கலைக்கழக

மாணியங்கள் ஆணைக்குழு கலைப்பீடத்தின் பூரணவிருப்பத்துடன் சித்தமருத்துவத்துறையை துணைவேந்தரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயற்படவைத்தது. பேராசியா A. துரைராஜா (துணைவேந்தர்) அவர்கள் சித்த மருத்துவதுறையின் அபிவிருத்தியை நோக்கமாகக்கொண்டு சித்தமருத்துவத்துறையை மூன்று பிரிவுகளாக பிரித்து அவை ஒவ்வொன்றிற்கும் ஒரு விரிவுரையாளரை பொறுப்பாக நியமித்தார்.

சித்த மருத்துவ அடிப்படைத் தத்துவங்கள் உடல் அமைப்பு, உடல் தொழிலியல் ஆகியவை - PRE CLINICAL

மூலிகை விஞ்ஞானம் ஔடத செய்முறை பிணியியல் ஆய்வுகூட பரிசோதனைகள் ஆகியவை - PARA CLINICAL

ரோக விஞ்ஞானம், ரோக நிச்சயம் , பரீட்சை முறைகள், சமூக மருத்துவம் சிகிச்சை, பத்தியாபத்தியம் ஆகியவை - CLINICAL

விரிவுரையாளர்கள் பட்டமேற்படிப்பை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளை துறைத்தலைவர் மேற்கொண்டார். இலங்கையில் சித்தமருத்துவத்தில் பட்டமேற்படிபிற்கான நிறுவனங்கள் இல்லாமையினால் இந்திய மத்திய மருத்துவசபைக்கு (Central Counuolf Indian Medicine) கடிதங்கள் எழுதப்பட்டன. அதன் பின்னர் அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க யாழ் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்பட்ட D.A.M.S. பாடத்திட்டம் B.S.M.S. பாடத்திட்டம் ஆகியவை அவர்களுக்கு அனுப்பப்பட்டன. அதனை ஆராய்ந்த இந்திய மத்திய மருத்துவசபை D.A.M.S, B.S.M.S. பட்டம் பெற்றவர்கள் இந்தியாவில் பட்டமேற்படிப்பை சித்தமருத்துவத்தில் தொடர்வதற்கு அனுமதி வ்ழங்கி அந்த இரு பட்டங்களையும் இந்திய மத்திய மருத்துவசபை அங்கீகரித்துள்ளதாக துணைவேந்தர் பேராசிரியர் A. துரைராஜா அவர்களுக்கு அறிவித்தது. இதன் பயனாக இன்று பத்திற்கு மேற்பட்ட வைத்தியர்கள் MD(s) பட்டப்பின்படிப்பை நிறைவு செய்துள்ளனர். பட்டப்பின்படிப்பு விரிவுரையாளர்களின் பதவி உயர்விற்கு முக்கியம் என்பதால் கலைப்பீடாதிபதி பேராசிரியர் P. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் MPhil பட்டப்பின் படிப்பை சித்தமருத்துவத்துறை விரிவுரையாளர்களின் நன்மை கருதி ஆரம்பித்து வைத்தார். இதன் பயனாக இன்று ஐந்து பேர் M.Phil பட்டபின்படிப்பை நிறைவு செய்துள்ளனர்.

டாக்டர் செல்வி: வசந்திதேவராஜா, டாக்டர் S. சிவசண்முகராஜா ஆகிய இருவரும் 1991ம் ஆண்டு சித்தமருத்துவத்துறையின் விரி:வுரையாளர்களாக நியமிக்கப்பட்டனர். கொழும்பிலிருந்து சித்தமருத்துவத்துறை யாழ் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டபோது 7 விரிவுரையாளர்கள் இருந்தனர். 1991ம் ஆண்டுவரை ஒரு விரிவுரையாளர் பதவிகூட சித்தமருத்துவத்துறைக்கு அதிகரிக்கப்படவில்லை. இதை பீடாதிபதியுடனும் துணைவேந்தருடனும் முறையிட்டு

1991ல் பதவிகள் சம்பந்தமான கூட்டத்தில் துறைத்தலைவர் தானும் கலந்து கொள்ள கொழும்பிற்கு செல்ல அனுமதியை பெற்றார். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுக் கூட்டத்தில் (Cadre Committee Meeting) கலந்து நிலைமையை புரியவைத்து 3 விரிவுரையாளர் பதவி, 1 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி ஒரு உதவி நூலகர் பதவி இரண்டு தொழிலாளர் பதவிகளை துறைத்தலைவர் S. பவானி பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.)

1991ம் ஆண்டில் சித்த இயற்கை மருந்து உற்பத்திகள் என 10 மருந்துகளை தயாரித்து ஒரு கண்காட்சியை சித்த மருத்துவதுறையினர் நடாத்தினர். இதில் 'சுக்மல்' என்ற பெயரில் மூலிகைகளால் செய்யப்பட்ட தேநீர் போன்ற பானம் மக்களின் வரவேற்பை பெற்றதுடன் தயாரிக்கப்பட்ட 100 கிறாம் கொண்ட1200 பெட்டிகளும் விற்பனையானது குறிப்பிடப்படவேண்டிய அம்சமாகும் . இதனைவிட நுளம்புத்திரி, குரக்கன் பிஸ்கற், நீர்க்கோவை மாத்திரை, சத்துமா போன்ற மருந்துகளை தயாரிப்பதற்கு சித்த மருத்துவத்துறை விரிவுரையாளர்களும் மாணவர்களும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒருங்கு சேர்ந்து செயற்பட்டனர். இந்த மருந்துகளை தொடர்ச்சியாக செய்து மக்களுக்கு வழங்க முடியாமைக்கு நிதிப்பிரச்சனை, மனிதவளம், மருந்து தயாரிக்கும் உபகரணங்கள், இயந்திரங்கள் இல்லாமை காரணங்களாக அமைந்தது.

1992ம் ஆண்டில் டாக்டர் ளு. சிவசண்முகராஜா விரிவுரையாளர் பதவியை விட்டுவிலகி கைதடி ஆயுள்வேத ஆரோக்கியசாலையில் மருத்துவ உத்தியோகத்தர் பதவியை ஏற்றுக்கொண்டார்.பாடத்திட்டத்தில் மூதவையின் அனுமதியுடன் தேவைக்கேற்ப அவ்வப்போது சிலமாற்றங்கள் செய்யப்பட்டது. 1992ம் ஆண்டில் மாண்புமிகு ஜனாதிபதி R. பிரேமதாசா அவர்களினால் இலங்கையின் சுகாதாரக் கொள்கையை வகுப்பதற்கு (Health Policy of Sri Lanka) ஒரு குழு அமைக்கப்பட்டது. அதில் தேசிய மருத்துவம் சம்பந்தமாக ஆயுள்வேத, சித்த, யூனானிப் பிரிவுகளுக்கு ஒவ்வொருவர் நியமிக்கப்பட்டனர். சித்தமருத்துவத்துறைத்தலைவர் டாக்டர் S. பவானி சித்தமருத்து வத்துறைசார்பில் அங்கத்தவராக இருந்த குழுவிற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார். இந்த குழுவின் செயற்பாடுகள் மூன்று மாதமாக கொழும்பில் நடைபெற்றபடியால் பதில் துறைத்தலைவராக டாக்டர் திருமதி G. A. பவானி நியமிக்கப்பட்டார். 1992ல் டாக்டர் S. திருநாவுக்கரசு விரிவுரையாளர் பதவியிலிருந்து ஓய்பெற்றார். 1992ம் ஆண்டு யூலை மாதம் டாக்டர் திருமதி T. குமுதரஞ்சன் அவர்கள் சித்தமருத்துவத் துறையில் விரிவுரையாளராக நியமனம் பெற்றார்.

1992ம் ஆண்டில் மூன்றாம் வருட பரீட்சையில் சித்தியடைந்த மட்டக்களப்பைச் சேர்ந்த மாணவன் S. யோகநாதன் நுணாவிலில் உள்ள ஒரு குளத்தில் நண்பனுடன் நீந்தச் சென்ற வேளையில் நீரில் மூழ்கி அகால மரணமானார். போக்கு வரத்து மட்டுபடுத்தப் பட்டிருந்ததால் இவரின் தாயார்

கூட கலந்து கொள்ள முடியாத நிலையில் மரணித்த 5வது நாள் இறுதிக்கிரியை நடைபெற்று அவருடைய சிகைக்கு துறைத்தலைவர் தீ மூட்டினார். மாணவர்களிடையேயும் விரிவுரையாளர்களிடையேயும் அவரின் பிரிவு ஜீரணிக்க முடியாது இருந்தது. துறைத்தலைவரின் தயவான வேண்டுகோளுக்கிணங்க துணைவேந்தர் பேராசிரியா A. துரைராஜா அவர்கள் இறுதிச் சடங்கிற்கான முழுச்செலவையும் பல்கலைக்கழக நிதியிலிருந்து வழங்கினார். யோகநாதனின் தாயார் 25000 ரூபா பணத்தை வழங்கி யோகநாதனின் பெயரால் 4ம் வருடத்தில் முதலாவதாக சித்தியெய்தும் மாணவனுக்கு அதன் வட்டிப் பணத்தை வழங்கும் படி கேட்டுக்கொண்டார்.

1994ம் ஆண்டில் சித்தமருத்துவத்துறை விரிவுரையாளர்கள் மாணவர்கள் மற்றும் கல்விசார உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஒன்றுசேர்ந்து ஒரு மருத்துவக் கண்காட்சியை கைதடி சித்தமருத்துவத்துறையில் ஒழுங்குசெய்தனர். இந்த கண்காட்சி ஆறு நாட்கள் தொடர்ந்து நடைபெற்றதுடன் சகல யாழ் மாவட்ட கல்லூரி மாணவர்களும், பொதுமக்களும் பார்வையிட்டு மிகவும் பயனுள்ள கண்காட்சி என பாராட்டினர். முதல்நாள் நிகழ்வின்போது துணைவேந்தர் பேராசியர் A. துரைராஜா அவர்களும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகரும் கலந்து சிறப்பித்தனர்.

சித்த மருத்துவத்துறை தலைவரின் வேண்கோளுக்கிணங்க பேராசிரியர் A. துரைராஜா அவர்கள் சித்த மருத்துவத்துறைக்கு ஒரு முச்சக்கரவண்டியும் (Three Wheeler ஒரு மின்பிறப்பாக்கியும் (10Kw Generator) வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்து அவற்றை பெற்றுக்கொடுத்தார்.

துணைவேந்தர் பேராசிரியர் A. துரைராஜா அவர்கள் சுகயீனம் காரணமாக 1994ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் ஒருவருடம் சேவையாற்றக்கூடிய காலம் இருந்தும் துணைவேந்தர் பதவியிலிருந்து வைத்திய அறிவுறுத்தலுக்கமைய அப்பதவியிலிருந்து ஓய்வுபெற்றா். அவரைத் தொடர்ந்து பேராசிரியர் K. குணரத்தினம் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். பேராசிரியர் A. துரைராஜா அவர்களின் பிரியாவிடை வைபவம் மிகச்சிறப்பாக யாழ் பல்கலைக்கழகத்தில் மங்கள இசையுடன் இனிது நடைபெற்றது.

பேராசிரியர் P. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் இரண்டாவது தடவையாகவும் கலைப்பீடாதிபதியாக கடமையாற்றினார். அன்னாரின் பதவிக்காலத்தில் இரு தற்காலிக விரிவுரையாளர் பதவிகளும்,மூன்று செய்முறை காட்டுனர் பதவிகளும், வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

பேராசிரியர் K. குணரத்தினம் துணைவேந்தராக பதவி ஏற்றபின் சித்தமருத்துவப் பிரிவினை நிறுவகமாக்கும் கோரிக்கையை துரிதப்படுத்துமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவருக்கு கடிதம் எழுதினார்.

சித்த மருத்துவப் பிரிவிற்கு ஒரு ஆலோசனைக்குழு ஒன்றை அமைத்தார். துரதிஷ்டவசமாக அந்த செயற்குழு ஒரு முறையேனும் கூட்டத்தை நடத்தவில்லை. 1995 ஒக்டோபர் மாதம் 2ம் திகதி முதல் துறைத்தலைவராக டாக்டர் திருமதி M. ஸ்ரீகாந்தன் நியமிக்கப்பட்டார்.

1995 ஒக்டோபர் மாதம் 31ம் திகதி ஏற்பட்ட இடப்பெயர்வினால் யாழ். பல்கலைக்கழக செயற்பாடுகள் சாவகச்சேரியில் நடைபெற்றது. 1995ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் டாக்டர் திருமதி V. சத்தியசீலன் அவர்கள் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். கைதடி சித்தமருத்துவத்துறையில் சிலவிரிவுரையாளர்களும் இடம்பெயர்ந்த மக்களும் தங்கியிருந்தனர். அந்த சமயத்தில் பாதுகாப்பு அமைச்சர் கௌரவ அநுரத்தரத்வத்த கைதடி ஆயுள்வேத ஆரோக்கிசாலைக்கு வந்து நிலமைகளை பார்வையிட்டார். 1996ம் ஆண்டு மே மாதம் உயர்கல்வி அமைச்சர் கௌரவ றிச்சார்ட் பத்திரான அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்து அங்கு இராணுவத் தளபதியை அழைத்து யாழ். பல்கலைக்கழக செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெறுவதற்குரிய ஆயத்தங்களை செய்யுமாறு பணித்தார். பேராசியர் P. பாலசுந்தரம்பிள்ளை அவர்களை தற்காலிகமாக பல்கலைக்கழக நடவடிக்கைகளை தலைமைதாங்கி நடாத்துமாறு பணித்தார். மாணவர்கள் கொழும்பிலும் பல்வேறு மாவட்டங்களிலும் பாதுகாப்பு காரணங்களுக்காக தங்கியிருக்கின்றார்கள் என்பது அமைச்சருக்கு தெரியப்படுத்தப்பட்டது. பேராசிரியர் P. பாலசுந்தரம்பிள்ளை சித்தமருத்துவத்துறை சிரேட்ட விரிவுரையாளர் S. பவானி அவர்களை கொழும்பு சென்று மாணவர்களை விமானம்மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் அதிகாரியாக கடமையாற்றுமாறு பணித்தார்.

1996ம் ஆண்டு யூலை மாதம் முதலாம் திகதி முதல் பேராசியர் P. பாலசுந்தரம்பிள்ளை துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். 1996 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழவின் பல்மருத்துவ,மருத்துவ விஞ்ஞானத்திற்கான நிலையியற்குழு (Standing Committee on Dental& Medical Sciences) சித்தமருத்தவத்தறையை தரம் உயர்த்துவதற்கான ஒரு குழுவை நியமித்தது. இதில் பேராசிரியர் சு.பவானி அவர்கள் ஒரு அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இக்குழு சித்தமருத்துவத்துறையை தரமுயர்த்துவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பத்தது. சித்தமருத்துவத்துறை விரிவுரையாளர்களாக டாக்டர் P. இராமனாதன் அவர்கள் 1997இலும் டாக்டர் செல்வி சுமதி குமாரசாமி அவர்கள் 1998இலும் நியமிக்கப்பட்டனர். 1998ல் சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் S. பவானி இணைப்பேராசிரியராக நியமிக்கப்பட்டார். சுதேச மருத்துவ வரலாற்றில் முதல் இணைப்பேராசியாராக இவர் நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். 1998ம் ஆண்டு யூலை மாதம் பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு உரித்தான இரண்டு வருட விடுமுறையில் (Sabbatical Leave) பேராசிரியர் S. பவானி வடகிழக்குமாகாண சுதேசமருத்துவப் பணிப்பாளராக மேன்மைதங்கிய ஆளுநர்

காமினிபொன்சேகா அவர்களினால் நியமிக்கப்பட்டார். (Provincil Director of Indigenous Medicine North - East Province)

1998ம் ஆண்டில் சித்தமருத்துவத் துறைத்தலைவராக டாக்டர் திருமதி பு.யு. பவானி அவர்கள் நியமிக்கப்பட்டார். 1999ல் யாழ் பல்கலைக்கழக வெள்ளிவிழா ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டு பெரிய அளவில் கண்காட்சி நடாத்தப்பட்டது. இதில் மருத்துபீடத்தில் சித்த மருத்துவப் பிரிவும் பங்குபற்றி மக்களின் பாராட்டை பெற்றனர். 1999இல் டாக்டர் திருமதி A. ஸ்ரீதரன் அவர்கள் சித்த மருத்துவத்துறையில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.

2000ம் ஆண்டில் ஏற்பட்ட போர்ச்சூழலினால் கைதடி சித்த மருத்துவக்கட்டடம் சேதமடைந்ததுடன் சித்தமருத்துவத்துறை தற்காலிகமாக மருத்துவபீடத்தில் செயற்பட்டது. மருத்துவ பீடத்தின் செயற்பாடுகள் நடைபெறுவதற்கு இடம் போதாமையினால் துணைவேந்தர் பேராசிரியர் P. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் சித்த மருத்துவத்துறையை விளையாட்டு அலுவல்களுக்கு என கட்டப்பட்ட கட்டிடத் தொகுதியில் (Sports Complex) செயற்பட ஒழுங்குகள் செய்தார். சிலகாலம் அங்கு மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளுடன் செயற்பட்டது. 2000ம் ஆண்டில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக சித்தமருத்துவத்துறை தனது தளபாடங்கள், கற்பித்தல் உபகரணங்கள், நூல்கள் போன்ற பலவற்றை இழந்தமை குறிப்பிடத்தக்கது. சுகயீனம் காரணமாக சித்தமருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் திருமதி G.A. பவானி அவர்கள் தனது துறைத்தலைவர் பதவியிலிருந்து 2001ம் ஆண்டு ஜனவரி மாதம் ராஜினாமா செய்தார். அவரை தொடர்ந்து டாக்டர் திருமதி S. சிவபாலன் பதில்துறைத்தலைவராக நியமிக்கப்பட்டார்.

சித்தமருத்துவத்துறை இயங்குவதற்கு ஒரு கட்டடம் தேவை என பேராசிரியர் S. பவானி அவர்களை துணைவேந்தர் கேட்டுக்கொண்டார். டாக்டர் S. கணேசன் அவர்களின் துரித செயற்பாட்டினால், சித்மருத்துவத்துறை கோயில் வீதியில் இயங்கலாயிற்று. இந்த சமயத்தில் பேராசிரியர் A. சண்முகதாஸ் அவர்கள் சித்தமருத்துவத் துறையின் பதில் தலைவராக சிலமாதம் கடமையாற்றினார். இடப்பெயர்வு காரணமாக கைதடி ஆயுள்வேத ஆரோக்கியசாலை மானிப்பாயிலும் அதனைத்தொடர்ந்து கொக்குவிலிலும் இயங்கியது. சித்தமருத்துவத்துறை மாணவர்கள் ஆரோக்கியசாலைப் பயிற்சியை பெற்றனர். 2001ம் ஆண்டில் டாக்டர் S. சிவசண்முகராஜா சிரேஷ்டவிரிவுரையாளராகவும் டாக்டர் திருமதி T. திலீபன் அவர்கள் விரிவுரையாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

2001ம் ஆண்டு ஜூலை மாதத்தில் டாக்டர் திருமதி M. ஸ்ரீகாந்தன் சித்தமருத்துவ துறைத்தலைவராக நியமிக்கப்பட்டார். இந்த சமயத்தில் கைதடி சித்தமருத்துவப்பிரிவின் கட்டடத்தில் திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 2002ம் ஆண்டு மீண்டும் கைதடியில் சித்தமருத்துவத்துறையில் இயங்க ஆரம்பித்தது.

அத்துடன் புடிப்படியாக இழந்தபொருட்களை மீளவும் வாங்கி பாடத்திட்டத்தை பூர்த்திசெய்யும் அளவிற்கு ஒழுங்குகள் துறைத்தலைவரினாலும் துணைவேந்தரினாலும் மேற்கொள்ளப்பட்டன.

2002ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சித்தமருத்துவத்துறையின் கல்வி, பரீட்சை, நிர்வாகம் சம்பந்தமாக ஆராய்வதற்கென பேராசிரியர் ஞ. பத்மநாதன் அவர்களை ஒருதனிநபர் குழுவாக அமைத்து யாழ் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியிருந்தது. அவர் டிசம்பர் மாதம் 12ம் திகதியிலிருந்து 14ம் திகதி வரை மூன்று நாட்கள் தங்கியிருந்து சித்தமருத்துவ மாணவர்கள், விரிவுரையாளர்கள், பீடாதிபதிகள், பேராசிரியர்கள் போன்றவர்களைச் சந்தித்து விபரங்களை ஆராய்ந்து பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவிற்கு ஒரு அறிக்கயை சமர்ப்பித்தார். அந்த அறிக்கையின்படி பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழு மூன்று சிபார்சுக்களை யாழ் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு அனுப்பியிருந்தது.

1. உடனடியாக சித்தமருத்துவத்துறையை துணைவேந்தரின் நிர்வாகத்திலிருந்து பிரித்து அதனை கலைப்பீடத்துடன் கலைப்பீடாதிபதியின் நிர்வாகத்தின் கீழ் இணைத்தல்.
2. அறிக்கையில் குறிப்பிட்டுள்ள மற்றும் சிபார்சுகளை நிறைவேற்றுவது

3. ஒரு நிறுவகமாக சித்தமருத்துவத்துறையை அமைப்பதுபற்றி பல்கலைக்கழகத்தின் கருத்தை அறிதல் அல்லது சித்த மருத்துவத்துறையை உள்நாட்டு மருத்துவ நிறுவகத்துடன் (கொழும்பு பல்கலைக்கழகம்) இணைத்து ஆயுள்வேத மருத்துவம், சித்தமருத்துவம், யூனானி மருத்துவம் ஆகிய மூன்று துறைகளும் முன்னர் இருந்தது போல் ஒன்றாக செயற்படவைத்தல்.

மேற்கூறிய சிபார்சுகளுக்கமையவே சித்தமருத்துவத்துறையை நிறுவகமாக தரமுயர்த்த வேண்டும் என பல்கலைக்கழகம் தீர்மானித்தது. அத்துடன் பல்கலைக்கழகத்தினால் 1991ம் ஆண்டு முதல் முன்வைக்கப்பட்ட கோரிக்கை இதுவாகும்.

இதன் பின்னர் துணைவேந்தராக 2003ம் ஆண்டில் பேராசிரியர் ஞ. மோகனதாஸ் நியமிக்கப்பட்டார். ஒரு துணைவேந்தரின் கீழ் ஒரு துறை அமைவது பல்கலைக்கழக சட்டத்திற்கு பிறம்பானதாகும் எனக் கருதி ஒரு அதிகார நிர்வாகசபையை (Management Board) அமைத்து அதன் கீழ் செயற்படவைப்பது சிறந்தது என தீர்மானிக்கப்பட்டது. ஆரம்பத்தில் பேராசிரியர் S.V. பரமேஸ்வரன் தலைமையில் நிர்வாகசபை ஐந்து பேர் கொண்டதாக அமைக்கப்பட்டது.

சித்தமருத்துவத்துறை நிறுவகமாக்கப்படவேண்டும் என்பதை பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவின் உபதலைவராகிய பேராசிரியர் S. பத்மநாதனும் பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவரான

பேராசியரியர் K. D. அருட்பிரசாசமும் வலியுறுத்தி பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர். B.R.R.N. மெண்டிஸ் அவர்களுக்கு சிபார்சு செய்தனர். இதை அறிந்த சித்தமருத்துவ மாணவர்கள் நிறுவகம் தமக்கு ஏற்புடையதல்ல எனவும், சித்தமருத்துவத்து:றை ஒருபீடமாக்கப்படவேண்டும் எனவும் பகி'கரிப்பு போராட்டமொன்றை கைதடி சித்தமருத்துவத்துறையில் 8.6.2003ல் இருந்து ஆரம்பித்தனர். 26.7.2003ல் நடந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக பேரவைக் கூட்டதில் ஏழு பேர் கொண்ட ஒரு சபையை அமைத்து சித்தமருத்துவத்துறையை பீடமாக்குவது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணிக்கப்பட்டனர். துணைவேந்தர் பேராசிரியர் S. மோகனதாஸ் அவர்களின் உறுதிமொழிக்கிணங்க மாணவர்களின் 50 நாள் பகிஷ்கரிப்பு போராட்டம் கைவிடப்பட்டது. ஆயினும் தொடர்ந்து பீடமாக்குவது சம்பந்தமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2005ம் ஆண்டில் டாக்டர் கலைச்செல்வி சௌந்தரராஜன் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். 2007ம் ஆண்டில் பேராசிரியர் V. சண்முகலிங்கம் அவர்கள் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். இவருடைய பதவிக்காலத்தில் சித்தமருத்துவத்துறை பீடமாக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை வைத்து ஒரு திட்டவரைபு மூதவைக்கும் பேரவைக்கும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவின் சுதேச மருத்துவத்திற்கான நிலையியற்குழுவின் (Standing Committee on Indigenous Medicine) சிபார்சிற்கு அனுப்பப்பட்டது. இதை பரீசீலித்த நிலையியற்குழு பீடஅந்தஸ்திற்கான திட்டவரைபை நிராகரித்து ஒரு நிறுவகமாக மாற்றுவதற்கான திட்டவரைபை தயாரித்து அனுப்புமாறு பணித்தனர். எனவே நிலையியற்குழுவின் அங்கத்தவரான சித்த மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் திருமதி S. பஞ்சராஜா மற்றும் சித்தமருத்துவத்துறையினரால் நிறுவகத்திற்கான திட்டவரைவு தயாரிக்கப்பட்டு மூதவை, பேரவையினால் ஆமோதிக்கப்பட்டு மீண்டும் பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவின் சுதேசமருத்துவத்திற்கான நிலையியற் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. நீண்ட கலந்துரையாடலின் பின்னர் சித்தமருத்துவத்துறையை நிறுவகமாக்க வேண்டும் என்ற சிபார்சு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2010ம் ஆண்டு செப்ரம்பர்மாதம் டாக்டர் செல்வி V. சண்முகராஜா விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். திருமதி டாக்டர் T. குமுதரஞ்சன் சித்தமருத்துவத்துறைத்தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் எழுத்துமூலம் மேற்படி குழுவால் நிறுவகமாக தரம் உயர்த்தப்படும் என எடுக்கப்பட்ட முடிவை நடைமுறைப்படுத்துவதில் நீண்டதாமதம் ஏற்படுவதை சுட்டிக்காட்டி விரைவாக நிறுவகமாக்கப்பட வேண்டுமென கேட்டுக்கொண்டார். இதன் விளைவாக நிறுவகமாகக்கவேண்டும் என்றமுடிவை மீள் உறுதி செய்து பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு இந்த திட்டவரைபு அனுப்பப்பட்டுள்ளது.

சித்த மருத்துவத்துறை இருபத்தைந்து வருடங்களை பூர்த்திசெய்த நிலையிலும் தனது அடையாளத்தை பல்கலைக்கழகத்தில் உறுதிப்படுத்தமுடியாத நிலையில் இருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.சித்தமருத்துவத்துறை பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவின் சட்டதிட்டங்களுக்கமைய ஒரு நிறுவகமாக தரமுயர்ந்தப்படவேண்டும் என்னும் முடிவை பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழு எடுத்தாலும்கூட அதை நடைமுறைப்படுத்துவதற்கு அரசியல் ரீதியான பங்களிப்பு (Political Commitment) காலத்தின் இன்றைய தேவையாக கருதப்படுகின்றது. இருபத்தைந்து வருட காலமாக எடுப்பார் கைப்பிள்ளையாக இருக்கும் சித்தமருத்துவத்துறை தமிழர் நலன்களில் அக்கறையுள்ள சகல அமைப்புக்களாலும் ஈர்க்கப்பட்டு எமது கலாச்சாரம் பண்பாட்டிற்கமைய ஒரு உயர் அந்தஸ்த்திற்கு உயர்த்தப்படவேண்டும், மற்றும் சுதேச மருத்துவப் பிரிவுகளைப்போல் சுய ஆதிக்கம் கொண்ட மருத்துவ கல்வி நிலையமாக அமையவேண்டும் என்ற எங்கள் மனத்துடிப்பை ஆக்கபூர்வமான ஒரு செயற்பாடாக அமைக்க உங்கள் எல்லோரது ஒத்துழைப்பையும் நாடிநிற்கின்றோம்.

சித்த போதனாவைத்தியசாலை மாணவர்களின் மருத்துவக் கல்வி செயற்பாடுகளுக்கு முக்கிய தளமாக உள்ளது. இதன் அபிவிருத்தியும் மாணவர்களையும் நோயாளரையும் சென்றடைய வேண்டும். அதற்காக பல்கலைக்கழக துணைவேந்தரும் சுதேசவைத்தியஅமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்துரையாடி தேவைகளை இனம் கண்டு அவற்றை நிறைவேற்றினால் சித்தமருத்துவம் முன்னேற்றமடைய அடித்தமளாக அமையும் என்பது எமது நம்பிக்கையாகும்.

கல்வி கலாச்சார உத்தியோகத்தர்கள் அனைவரும் எங்கள் கல்விச் செயற்பாட்டிற்கு ஊக்கமளித்ததுடன் சித்த மருத்துவத்துறையின் அனைத்து வைபவங்களிலும் பங்குபற்றி தங்கள் ஆதரவை சிறப்புற வழங்கினார்கள்.

தற்சமயம் எங்களுடன் பணியாற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் 13 பேர் இருக்கின்றார்கள்.

1) திரு. S. ஜெயகுமார் - தொழில் நுட்ப உத்தியோகத்தர்
2) திரு. H. கமலேஸ்வரன் - தொழில் நுட்ப உத்தியோகத்தர்
3) திரு. K. கீதபொன்கலன் - தொழில் நுட்ப உத்தியோகத்தர்
4) திரு. R. தவராஜா - தொழில் நுட்ப உத்தியோகத்தர்
5) திருமதி. J. குகானந்தன் - தொழில் நுட்ப உத்தியோகத்தர்
6) திருமதி. S. ஜெயபாலசுந்தரம் - நூலக பொறுப்பாளர்

7) திரு. M. நந்தீஸ்வரன்

8) திரு. K. பாலசுந்தரம்

9) திரு. S. சிவராஜா

10) திரு. M. சிறீகுமாரன்

11) திரு. R. பாஸ்கரன்

12) திரு. K. வேலானந்தன்

13) திரு. A. றெஜினோல்ட்

பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக பின்வருவோர் கடமையாற்றுகின்றனர்.

1) திரு. V. தர்மகுலசிங்கம்

2) திரு. K. மச்சேந்திரகுமார்

3) திரு. V. நவராசா

4) திரு. S. ராஜ்குமார்

திருமதி க. உருத்திரசுந்தரம் நீண்ட காலமாக சித்த மருத்துவத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

பின்வரும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் தொழில் ரீதியாக மாற்றம் பெற்றும், சுய தேவைகளுக்காக வெளிநாடு சென்றும் உள்ளனர்.

திருவாளர் E. முருகையா, S. தர்மதாசன், A. சுந்தரலிங்கம், K. ஆறுமுகம், R ஜீவமோகன், K. விக்னேஸ்வரன், T. பத்மநாதன், S. தயாபரன், A. கிரிதரன், R. சத்தியேந்திரா, K. புஸ்பரத்தினம், செல்வி M. சர்மிளா.

## சித்த மருத்துவ பட்டதாரிகளின் வளர்ச்சிப் பாதையின் மைல் கற்கள்

யாழ் பல்கலைக் கழகத்தில் சித்த மருத்துவத் துறையானது 25 ஆண்டுகளாக தனது பணியைத் தொடருவதால் சித்த மருத்துவ வளர்ச்சி பற்றி வெள்ளி விழாக்காணும் இச் சந்தர்ப்பத்தில் சிந்திப்பது மிகவும் பொருத்தமானதாகும். 1984ம் ஆண்டு கொழும்பில் இருந்து தமிழ்ப் பிரதேசத்துக்கு இடமாற்றப்பட்ட பின் இங்கு பட்டம் பெற்று வெளியேறியவர்கள், நிர்வாக அலகுகளில் எவ்வாறு தமது வளர்ச்சியைக் கண்டுள்ளார்கள் என்பதை வெளிக்கொணர்வது முக்கியமானதாகும்.

### 1. சித்த மருத்துவ பட்டதாரிகள்


முதலில் யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறிய இறுதி DAMS பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பானது 1992ம் ஆண்டில் 25 வீதமானவர்களுக்கு மட்டுமே சாத்தியமாக இருந்தது. இதில் தற்போது இருவர் வைத்திய அதிகாரிகளாகவும், ஒருவர் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளராகவும் (தற்போது தலைவராகவும்) ஒருவர் ஒப்பந்த அடிப்படையிலும் வேலை செய்கின்றனர். ஏனையோர் தனியார் துறைகளிலும், வெளிநாடுகளிலும் உள்ளனர்.

முதலாவது தொகுதி B.S.M.S. பட்டதாரிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தமையினால் அந்த நால்வருக்கும் அரச துறையில் 1992ம் ஆண்டு வைத்திய உத்தியோகத்தர்களாக வேலை வாய்ப்புக் கிடைத்து. இதில் ஒருவர் தற்போது சித்த மருத்துவத் துறையில் உள்வாங்கப்பட்டு சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றுகிறார். ஒருவர் சித்த மருத்துவத் துறையில் விரிவுரையாளராக இருந்து பினனர் அமெரிக்கா சென்று மேலைத்தேச மருத்துவத்தில் MD பயின்றுள்ளார். இரண்டாம் தொகுதி B.S.M.S.பட்டதாரிகளில் முதலில் முன்னிலையில் இருந்த நால்வருக்கு மட்டுமே 1993ம் ஆண்டு வைத்திய உத்தியோகத்தர்களாக வேலை வாய்ப்புக் கிடைத்தது. தற்போது இதில் ஒருவர் மாகாணப்பணிப்பாளராக பதவி வகிக்கின்றார். இருவர் யாழ்பல்கலைக்கழக சித்தமருத்துவப்பிரிவில் சிரேஷ்ட விரிவுரையாளராக உள்வாங்.கப்பட்டுள்ளனர்.


அதனைத் தொடர்ந்து சித்த ஆயுள்வேத யுனானிப் பிரிவு தலைவர்களின் முயற்ச்சியினால் 1996ஆம் ஆண்டுமுதல், படித்து வெளியேறிய அனைத்து பட்டதாரிகளுக்கும் அரச வேலை வாய்ப்பு சாத்தியமானது... தற்போது இறுதியாக வெளியேறிய இரண்டு தொகுதி பட்டதாரிகள் தவிர அனைவருக்கும் நிரந்தர வேலை கிடைத்துள்ளது. இருப்பினும் சில பட்டதாரிகள் அவ்வேலையை நிராகரித்து தனியார் துறையில் நிலைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.


பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பட்டதாரிகளில் தற்போது ஆயுள்வேத வைத்தியசபையில் பதிவு பெற்ற வைத்தியர்களாக 229 பேரும், உள்ளகப் பயிற்சி வைத்தியர்களாக 3 பேரும் உள்ளனர்.B.S.M.S. இறுதி வருட B.S.M.S. பரீட்சையை முடித்த பின் உள்ளகப் பயிற்சி பெறாதவர்கள் 7 பேரும் உள்ளனர்.

பட்டதாரிகளின் தொழில்வாய்ப்புகள்




பட்டபின் தகமைகளை மேற்கொண்டோர்






யாழ் பல்கலைக் கழகத்தில் பட்டமேற் படிப்பிற்கான வாய்ப்புக்கள் குறைவாக உள்ளமையால் மருத்துவஉத்தியோகத்தில் பதவி உயர்வுக்கு தேவையான பட்டப்பின் படிப்பிற்கான வாய்ப்புக் குறைவாக உள்ளமையால் அநேகமான மருத்துவஉத்தியோகத்தர்கள் பட்டப்பின் படிப்பினை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். இதனை ஈடுசெய்வதற்கு சித்த மருத்துவப்பிரிவானது தரமுயர்த்தப்படுவதுடன், பட்டப்பின் படிப்பிற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்படுவது அவசியமானதாகும்.

## *2.அரச நிர்வாக அலகுகளில் வளர்ச்சி*

அரச நிர்வாக அலகு என்னும் போது இதன் கீழ் மூன்று வகையான நிர்வாகப்பிரிவுகள் இயங்குகின்றன. அவையாவன

1) மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்குபவை:
   1. சித்த போதனா வைத்தியசாலை கைதடி
   2. கிராமிய வைத்தியசாலை மஞ்சந்தொடுவாய்
   3. சித்த போதனா வைத்தியசாலை,கேணேசபுரி, திருகோணமலை.

2) மாகாண சபையின் கீழ் இயங்குபவை: வடக்கு மாகாணம்

மாவட்ட வைத்தியசாலைகள் - 4
(யாழ்ப்பாணம், வவுனியா,கிளிநொச்சி, மன்னார்).
கிராமிய வைத்தியசாலைகள் - 2
(பண்டத்தரிப்பு, கரவெட்டி.)
மத்திய மருந்தகங்கள் - 15

மருந்து உற்பத்தி அலகு - 1
(அச்சுவேலி)
மூலிகைத்தோட்டம் - 5
(திருநெல்வேலி, அராலி, நவக்கிரி,
கிளிநொச்சி, முல்லைத்தீவு )

மனித வளமேம்பாட்டு நிலையம் - 1
(சுன்னாகம்)

கிழக்கு மாகாணம்:
மாவட்ட வைத்தியசாலை - 3
(புதுக்குடியிருப்பு,கப்பல் துறை, அம்பாறை)

கிராமிய வைத்தியசாலைகள் - 3
(நிலாவெளி, கல்முனை, நிந்தாவூர்)
மத்திய மருந்தயங்கள் - 41

மருந்து உற்பத்தி நிலையம் - 02
(கப்பல்துறை, திருகோணமலை, யுணானிமருந்து
உற்பத்தி நிலையம் அக்கறைப்பற்று)
பஞ்சகர்ம வைத்தியசாலை - 03
(காத்தான்குடி, கப்பல்துறை., புதுக்குடியிருப்பு)

Health Resorts - 08
(கப்பல்துறை)

### *3) உள்ளூராட்சி சபையின் கீழ் இயங்குபவை*

வடக்கு மாகாணம் - 39
(கிராமிய சபை- 39, மாநாகர சபை)

கிழக்கு மாகாணம்:
(நகரசபை- 1 கிராமியசபை - 7) - 8

## *சித்த போதனா வைத்தியசாலை*

இது 1972ல் வெளிநோயாளர் பிரிவுடன் ஆரம்பமாகி 1978ல் உள்நோயாளர் பிரிவு இயங்கத் தொடங்கியது. 1990ம் ஆண்டில் மகப்பேற்று விடுதி ஆரம்பிக்கப்பட்டது. மகப்பேற்று விடுதி ஆரம்பிப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்கியபோதும், மாணவர்களின் கல்வித் தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன், அப்போதிருந்த துறைத்தலைவர் Prof.. S. பவானியின் பெருமுயற்சியினால் ஆரம்பிக்கப் பட்டது. இவ்வைத்தியசாலை தொடங்கிய காலங்களில் பல விசேட சிகிச்சைப் பிரிவுகள் இயங்கிய போதும் பின்பு அவை நிறுத்தப்பட்டு விட்டன. ஆரம்பத்தில் மருத்துவஅத்தியட்சகர் (M.S.) பொறுப்பாக நியமிக்கப்பட்டார். 1977ம் ஆண்டு தொடக்கம் இதற்குரிய பதவிநிலை மருத்துவஉத்தியோகத்தர்கள் இல்லாமையினால் பதில் மருத்துவப் பொறுப்பதிகாரி பதவியே வழங்கப்பட்டு வருகின்றது. 2008 ஆண்டு முதல் பதில் மருத்துவ பொறுப்பதிகாரியாக முதலாம் பி.எஸ்.எம்.எஸ் அணி வைத்தியர் டாக்டர் (திருமதி) பிறேமா சிவசண்முகராஜா நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.. அதுமட்டுமன்றி 1992ஆம் ஆண்டு முதல் யாழ் பல்கலைக் கழகத்தில் இருந்து வெளியேறிய பட்டதாரிகளுக்கே நியமனம் வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது 8 மருத்துவ உத்தியோகத்தர்கள் மட்டுமே கடமைபுரிவது கவலைக்குரிய விடயமாகும்.

ஆனால் வெளிநோயாளர் பிரிவு, உள்நோயாளர் பிரிவு, மருந்து செய்யும் பிரிவு சரியான முறையில் செயற்படுவதற்கு வைத்தியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுதல் அவசியம் உள்நோயாளர் பிரிவில் சுழற்சி முறையில் வேலை செய்வதற்கு ஒரு விடுதிக்கு மூன்று வைத்தியர்கள் இருத்தல் அவசியம் வெளி நோயாளர் பிரிவில் குறைந்தது நான்கு வைத்தியர்கள் இருத்தல் அவசியம் அதேபோல் மருந்து செய்யும் பிரிவிற்கும் குறைந்தது மூன்று வைத்தியர்களாவது நியமிக்கப்படுதல் வேண்டும் மொத்தமாக குறைந்தது 22 மருத்துவ உத்தியோகத்தர்கள், 2 வதிவிடமருத்துவஉத்தியோகத்தர்கள், ஒரு மருத்துவ அத்தியட்சகர், மருத்துவநிபுணர்கள் மூன்றுபேரும் உட்பட பராம்பரிய வைத்தியர்கள் ஒவ்வொரு பிரிவிற்கும் தலா ஒருவர் வதும் நியமிக்கப்படின் சரியான முறையில்நிர்வாகம் இயங்குவதற்கும், மாணவர்களின் கல்விநடவடிக்கையை பூரணப்படுத்தப்படுவதற்கும் ஏதுவாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தற்போது இங்கு விசேட சிகிச்சைப் பிரிவுகள் இயங்குகின்றன.

1) Gynnacology Clinic - மாதர்நோய்சிகிச்சை
2) Paediatric Clinic - குழந்தைமருத்துவம்
3) Skin Clinic - தோல்சிகிச்சை
4) Diabetic Clinic - நீரழிவுச்சிகிச்சை
5) Orthopedic Clinic - முறிவுநெரிவு
6) Geadiatric Clinic - முதியோர் சிகிச்சை
7) Surgical Clinic - அறுவைச்சிகிச்சை
8) Visa vaidya - விஷவைத்தியம்
9) Acupuncture Clinic - அக்குபஞ்சர்

அத்துடன் U.N.D.P. அனுசரணையில் ரூபா 8,000,00 செலவில் மூலிகைத் தோட்டமானது 2008 இல் ஆரம்பிக்கப்பட்டு வைத்தியர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ விரிவுபடுத்தப்பட்டு வருகின்றது.. இது பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்களின் கல்விப்பயன்பாட்டை பூர்த்தி செய்யக் கூடிய அளவுக்கு விரிவு படுத்தப்பட வேண்டும்.

இங்கு ஆய்வு கூட வசதி தற்போது இல்லாமையால், தேவையான பரிசோதனைகள் மேற்கொள்ளக் கூடியளவு விரிவு படுத்தப்பட வேண்டியது அவசியமானதாகும் அத்துடன் ஆய்வுகூடத்திற்கென பிணியியலாளர் (Pathologist) ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும். மேலும் கதிர்வீச்சுப்பிரிவு, அல்ராசவுண்ட் பிரிவு உருவாக்கப்படல் வேண்டும். இதன் மூலம் நோய் கணிப்பு உறுதிசெய்யப்படுவதுடன் இப்பயிற்சியை மாணவர்களும் பெற்றுக்கொள்ள ஏதுவாகும். முன்பு இயங்கிய .மகப்பேற்று விடுதியும், ஆரம்பகர்ப்பிணி சிகிச்சை நிலையம் (ANC) மீள ஆரம்பிக்கப்பட்டு மாணவர்களின் கல்வித்தேவையை நிறைவு செய்வதற்கு ஏதுவாக விரிவுபடுத்தப்படவேண்டும்.

வைத்தியசாலையின் நிர்வாகம் சகலபிரிவுகளிலும் சிறப்பான முறையில் செயற்படுவதற்கு போதியளவு நிர்வாக உத்தியோகத்தர்கள், ஆய்வுகூட பரிசோதகர்கள், தாதியர்கள், மருத்துவ மாதுக்கள் உட்பட அனைத்துத்தர ஊழியர்கள் நடத்தப்பட வேண்டும்

மத்திய அரசின் கீழ் கொள்கையளவில் சித்த போதனாவைத்தியசாலையாக இயங்கும் இவ்வைத்தியசாலை அரச அங்கிகாரத்துடன் தரமுயர்த்தப்பட்டு வடமாகாணத்தில் மருத்துவசேவையைப் பூரத்தி செய்வதுடன் மருத்துவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநெறிகளையும் வழங்கக்கூடிய நிறுவனமாக தரமுயர்த்தப்படவேண்டும் என்பதே பட்டதாரிகளின் நீண்நாள் கனவாகும்.

### *மாகாணசபை நிர்வாகம்:*

வடகிழக்கு மாகாண சபையானது 1989 இல் ஆரம்பிக்கப்பட்ட போதும் 1993ம் ஆண்டிலேயே ஆயுள்வேத சேவையை ஆரம்பித்தது. இதனடிப்படையில் 1993ம் ஆண்டு இரண்டாவது B.S.M.S. வைத்தியர்களின் நியமனம் கிடைத்த போது முதலாவது ஆயுள்வேத மத்திய மருந்தகம் 22-07-1993 இல் புதுக்கடியிருப்பு, மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டு நியமனம் வழங்கப்பட்டது. அது தற்போது மாவட்ட வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது 15-11-1993ல் மஞ்சந் தொடுவாய் மட்டக்களப்பில் இரண்டாவது மத்திய மருந்தகம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டாம் அணி பட்டதாரிக்கு நியமனம் வழங்கப்பட்டது. இதுவும் 2009ல் மத்திய அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு கிராமிய வைத்தியசாலையாக தரமுயர்த்தப் பட்டுள்ளது. .இவற்றின் எண்ணிக்கை படிப்படியாக உயர்த்தப்பட்டு 2000ம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 6 மத்திய மருந்தகங்கள் இருந்தன. 2000ம் ஆண்டின் பின்னரே துரிதகதியில் வளர்ச்சியை காணக்கூடியதாக இருந்தது.

இதனால் பட்டம் பெற்று வெளியேறியதும் வைத்தியர்கள் மத்தியஅரசாங்கம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபையின் கீழ் உள்வாங்கப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பினனர் 2008 இல் வடகிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டபின் 2 மாகாணங் களிலும் சிறந்த முறையில் வளர்ச்சியைக் காணக்கூடியதாக உள்ளது. இங்கு வடக்கு மாகாணப் பணிப்பாளர். தனது நிர்வாகத்தை சிறந்த முறையில் நடத்துவதற்கு ஏதுவாக 5 மாவட்டத்திற்கும் 5 மாவட்ட இணைப்பாளர்களை நியமித்து அவர்கள் மூலம் நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க தாகும். வேலைப்பகிர்வு ஆனது எல்லா மாவட்டங்களிலும் சரியான முறையில் அமுல் படுத்தப்பட்டுள்ளமையால் சிறந்த நிர்வாகம் நடைபெறும் என்பதில் ஐயமில்லை.

1996இன் பின் தனித்து பட்டதாரிகளுக்கே வேலை வாய்ப்பானது சாத்தியமானதால் பட்டதாரிகள் அனைவருக்கும் வேலைவாய்ப்புக் கிடைத்தமையும், நீண்ட காலம் அவர்கள் வேலைக்கு காத்திருக்க வேண்டிய தேவையும் குறைந்துள்ளது. இதற்கு மாகாண சபையின் கீழ் துரிதகதியில் ஆரம்பிக்கப்பட்ட மாவட்ட வைத்தியசாலைகள், கிராமிய வைத்தியசாலைகள், மத்திய மருந்தகங்கள் போன்றன செயற்பட தொடங்கியமையே காரணமாகும். இங்கு அநேக பிரிவுகளில் நிரந்தர கட்டிடத்தில் இயங்குகின்ற போதும் பல தற்காலிக கட்டடத்தில் போதிய வசதியின்மையுடன் காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. கிழக்கு மாகாணத்தில் கூடியளவு நிரந்தரக் கட்டடங்களிலே இயங்குகின்றன. அங்கு வைத்தியர்களுக்கான விடுதி வசதியும் கூடியளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், மூலிகைத்தோட்டங்களும் அங்கு உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.. இதற்கு கிழக்கு மாகாணப்பணிப்பாளரின் சிறப்பான செயற்திட்டங்கள் காரணமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

### *மாகாண சபையின் மேலதிக செயற்பாடுகள்:*

இது தவிர மக்கள் மத்தியில் ஆயுர்வேதத்தை அறிமுகப்படுத்தும் நோக்கோடு வடமாகாணத்தில் 14 பிரதேசசெயலகப்பிரிவில் மட்டும் 14 ஆயுர்வேத சமூக மருத்துவ உத்தியோகத்தர்கள் (C. M. O (Ayurveda)) நியமிக்கப்பட்டு,அவர்கள் தடுப்பு முறைகளை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி வருகின்றனர்.இதில் சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தல்.மூலிகைப் பாவனையை அறிமுகப்படுத்தலும், மேம்படுத்தலும். போன்றன அடங்கும். விவசாயிகள் மூலிகை உற்பத்தியில் ஈடுபடும் வகையில் அவர்களுக்கு கருத்தரங்குகளை நடாத்தி, விதைகள் வழங்கி மூலிகை உற்பத்தியை பெருக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.. இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் எமது பட்டதாரிகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.மேலும் இவர்களின் நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கும்,ஆலோசனைகளை வழங்குவதற்கும் உதவியாக ஆயுர்வேதசுகாதாரமருத்துவ (MOH Ayurveda) பதவிகள் ஒவ்வொரு பிரதேசசெயலகப்பிரிவிலும் உருவாக்கப்படல் அவசியமாகும்.

## *உள்ளூராட்சி சபைகளின் கீழ் நிர்வாகம்:*

உள்ளூராட்சி சபையானது தனது ஆயுள்வேத வைத்திய சேவையை முதலில் ஆரம்பித்த போதும் பல பிரச்சனைகளை வைத்தியர்கள் எதிர்நோக்க வேண்டி உள்ளது.

1) நிரந்தர கட்டிடங்கள் காணப்படாமையும், சில இடங்களில் அடிப்படை வசதிகள் இல்லாமையும்.
2) போதிய மருந்தின்மை, தொடர்ச்சியாக மருந்து வழங்குவதில் சிரமம்.
3) மருத்துவர்களின் உயர்கல்விக்கான விடுமுறை உட்பட ஏனைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காமை.
4) மருந்துக் கொள்வனவானது மாகாண சபையில் நடைமுறை படுத்தப்பட்டுள்ள போதும் வைத்தியர்களாலேயே சிறந்த தரமான மருந்துகள் இனங்காணப்பட்டு கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை.
5) பதில் கடமைக்கு வைத்தியர்களை தயாராக வைத்திருக்காமை.

இந்நிலமைகளுக்கு உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்படும் ஆயுர்வேததிணைக்கள நிதிஒதுக்கீடு பற்றாக்குறையும் உள்ளூராட்சி சபைகள் ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு முன்னுரிமையும் உரிய அந்தஸ்தும் வழங்காமையும் காணரமாகும். இங்கு பணிபுரியும் வைத்தியர்களுக்கு மேலதிகாரிகளாக இருப்பவர்கள் சரியான நிர்வாகத்தரத்தில் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பது வைத்தியர்களின் விருப்பமாகும். இவ்வாறு இருப்பின் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படுவதையும் தடுக்கலாம் என்பது கண்கூடு.

இவற்றை விட தற்போது எமது பட்டதாரிகள், கொழும்பு பொறறளை மத்திய ஆயுள்வேத வைத்தியசாலை, நாவின்ன ஆராய்சி நிலையம், தேசிய பாரம்பரிய மருத்துவ நிறுவனம்.மற்றும் ஏனைய மாகாணங்களின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளிலும் பணி புரிகின்றமையால் எமது மருத்துவமானது நாடளாவியரீதியில் பரவ ஏதுவாகும்.

# இலங்கையில் சுதேச மருத்துவக் கல்வியின் வரலாற்று சுவடுகள்

இலங்கையில் ஆங்கிலேயரின் வருகைக்கு முன்னதாக எமது நாட்டின் கலாச்சாரம் பண்பாடுகளுக்கு ஏற்ப மக்களின் ஆரோக்கியத்தை பேணவும் நோய் நிலையை தணிக்கவும் தேசிய மருத்துவ முறை ஒன்று பேணப்பட்டு வந்தது. இலங்கையில் பொலநறுவை, அனுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை ஆண்ட மன்னர்கள் மருத்துவ சேவைக்கு முன்னுரிமை அளித்ததோடு சுகாதாரத்தை பேணுவதற்குரிய நடவடிக்கைகளை சிங்கள மருத்துவம், தமிழ் மருத்துவம் ஆகியவற்றின் மூலம் நடைமுறைப்படுத்தினர்.

1916ம் **ஆண்டு** -இலங்கையில் ஆங்கிலேயரின் ஆட்சியில் மேலைத்தேச மருத்துவமுறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட காரணத்தால் மக்கள் மத்தியில் சுதேச மருத்துவம் பரவாது புறந்தள்ளப்பட்டது. 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் சுதேச மருத்துவத்துறைக்கு தகுந்த இடம் கொடுக்கப்பட வேண்டும் என 1916ம் ஆண்டில் சட்ட நிருபண சபையில் சேர்.கே.பாலசிங்கம் (Advocate) பல தடவைகள் தனது கருத்துக்களை தெரிவித்தார்.

**1928 ம் ஆண்டு**- இதன் பயனாக 1928 ம் ஆண்டு சுதேச வைத்திய சபை ஒன்று நிறுவப்பட்டது. அதன் அங்கத்தவர்களாக பின்வருவோர் நியமிக்கப்பட்டனர்

கௌரவ சேர். கே. பாலசிங்கம் (தலைவர்)

கௌரவ .டி. பி. ஜெயதிலக

கௌரவ இ. எவ். மொலமுறே

கௌரவ டீ. எஸ். சேனநாயக்க

கௌரவ டபிள்யூ. எ. டி. சில்வா

கௌரவ நீதியரசர். டொனால்ட் ஒபயசேகரா

கௌரவ பண்டிதர். எம். எஸ். பி. சமரசிங்க

கௌரவ சி. முத்துகுமாரு


**1929ம் ஆண்டு**- சேர்.கே.பாலசிங்கம் தலைமை தாங்கிய மேற்படி சபையின் சிபாரிசுகளுக்கமைய மாண்புமிகு.தேசாதிபதி சேர்.ஹேர்பட் ஜேம்ஸ் ஸ்ரான்லி அவர்களால் 1929ம் ஆண்டு யூன் மாதம் 10ம் திகதி கொட்டா றோட்டில் அமைந்துள்ள பவர் (Bower) கட்டிடத்தில் சுதேச வைத்தியக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. இக் கல்லூரியின் முதல் அதிபராக கப்டன்.ஏ.என்.என்.பணிக்கர் நியமிக்கப்பட்டார். இவர் மேலைதேச மற்றும் கீழைத்தேச மருத்துவத்திலும் பட்டம் பெற்றிருந்தார். ஆயுர்வேத,சித்த, யுனானி வைத்திய முறைகள் இக்கல்லூரியில் கற்பிக்கப்பட்டன. விரிவுரையாளர்களாக பின்வருவோர் நியமிக்கப்பட்டனர்.

## சுதேச மருத்துவ வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய பெருந்தகைகளை

# நினைவு கூறுவோம்



Dr. A. கனகரட்ணம் Dr. C. சாம்பசிவஐயர் Dr. D. நல்லைநாதன்



Dr. R.J. உதுமானன் Dr. K. பாலசிங்கம் Dr. ANN. பனிக்கர்

| | | |
|---|---|---|
| அதிபர் | - | கப்டன்.ஏ.என்.என்.பணிக்கர்<br>ஆயுர்வேதபூசணம்(சென்னை)<br>M.B.ch.B(EDIN), M.R.C.S(Eng),<br>L.RC.P(Lon), L.C.P.S (Calcutha) |
| பதிவாளர் | - | G.N.நாணயக்கார<br>B.Sc(Lon) |
| விரிவுரையாளர்கள் | | |
| கவிராஜ் | - | R.B.லொனேறொ<br>L.A.M.S(Calcutha), M.A.M.S(Cal) |
| பண்டிதர் | - | A.கனகரட்ணம் வைத்தியசிங்கம் (siddha)<br>A.M.A.C (Madras)<br>Physician Ayurvedic Hospital, Madras |
| வைத்தியசாஸ்திரி | - | R.புத்ததாச |
| வைத்தியர் | - | D.L.விமலஜீவா |
| வைத்தியர் | - | C.சாம்பசிவஐயர்<br>L.A.M.S(Cal), பண்டிதர் (சமஸ்கிருதம்,தமிழ்) |
| வைத்தியர் | - | T.நல்லைநாதன்<br>M.R.C.S.(Edin),L.R.C.P.S(Lon) |
| வைத்தியர் | - | D.J.அபேரட்ண |
| வைத்தியர் | - | V.K.பரமநாயகம்<br>L.R.C.P.S(Edin)L.R.F.P.R.S(Glasgo) |
| வைத்தியர் | - | G.S.ஜயமவறா |
| வைத்தியர் | - | M.S.வறமீட் |
| வைத்தியர் | - | H.M.ஜாபர் |

**1931ம் ஆண்டு** - சுதேச வைத்தியக் கல்வி பவர் கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெற்று வருகையில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையினாலும் மற்றும் ஆரோக்கியசாலை பயிற்சி வழங்க வேண்டி இருந்ததனாலும் கொட்டா றோட்டில் ஒரு இடத்தை தெரிவு செய்து 1931ம் ஆண்டு அங்கு வைத்தியக் கல்லூரியும் ஆரோக்கியசாலையும் ஆரம்பிக்கப்பட்டது. வைத்திய கற்கைநெறிக்கான கால எல்லை 4 வருடங்களாக கணிக்கப்பட்டிருந்தது.

**1934 ம் ஆண்டு** - 1934 இல் பட்டம் பெற்று வெளியேறியவர்களுக்கு (D.I.M.S) சுதேச மருத்துவ சத்திர சிகிச்சை டிப்ளோமா பட்டம் வழங்கப்பட்டது.. ஆயுர்வேத பிரிவின் விரிவுரைகள் சிங்களமொழியிலும் சித்த பிரிவினது தமிழ் மொழியிலும் யுனானி பிரிவினது விரிவுரைகள் ஆங்கில மொழியிலும் கற்பித்தனர். சேர்.K.பாலசிங்கத்தை தொடர்ந்து சுதேச மருத்துவத்துறையின் தலைவராக வணக்கத்திற்குரிய மாலவனஞானீஸ்வரதேரரும் அதன்பின்னர்கௌரவசேர் S.W.R.D.பண்டாரநாயக்காவும் நியமிக்கப்பட்டனர்.

**1941 ம் ஆண்டு** -1941 ல் கௌரவ சேர் S.W.R.D.பண்டாரநாயக்கா உள்ளூராட்சி மற்றும் சுகாதார அமைச்சராக இருந்த போது சுதேச மருத்துவத்துறைக்கு அரச அங்கீகாரத்தை வழங்கி அதனை அரச நிறுவனமாக்கினார். 1941ம் ஆண்டு 17 ம் இலக்க சுதேச மருத்துவச் சட்டமூலத்தின் பிரகாரம் சுதேச மருத்துவச்சபை (Board Of Indineous Medicine) உருவாக்கப்பட்டு அதற்கு பின்வரும் பொறுப்புக்கள் வழங்கப்பட்டது.

1. சுதேச மருத்துவக் கல்லூரியை நிர்வகித்தல்
2. சுதேச மருத்துவ ஆரோக்கியசாலையை நிர்வகித்தல்
3. ஔடத பாகசாலை, மூலிகை தோட்டம் என்பவற்றை நிர்வகித்தல்
4. சுதேச மருத்துவர்களை பதிவு செய்தல் (Ordinance No. 17 of 1941)

**1947 ம் ஆண்டு** - தாஸ்குப்தா ஆனைக்குழு ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைப்பது அவசியம் என்ற சிபாரிசு செய்தது. இது செயல் வடிவம் பெறவில்லை.

**1951 ம் ஆண்டு** - டாக்டர். R.B.லெனோரா சுதேச மருத்துவக் கல்லூரியின் அதிப்ராக இருந்த போது கற்கை நெறி ஐந்து வருடங்களாக மாற்றப்பட்டது. இவர் மேலைத்தேச மருத்துவக் கல்வி பற்றிய அறிவு வைத்திய மாணவர்களுக்கு இருக்க வேண்டும் என்று கருதி பாராளுமன்றத்தில் ஓர் வெள்ளை அறிக்கையை (White Paper) சமர்ப்பித்தார்.

**1956 ம் ஆண்டு** - பண்டித் சிவசர்மா தலைமையில் அமைக்கப்பட்ட ஆணைக்குழு ஆராய்ச்சியின் அவசியம் பற்றி ஓர் அறிக்கை சமர்ப்பித்தது. இந்த காலகட்டத்தில் வைத்தியர்களான A.கனகரட்ணம், C.சாம்பசிவஐயர், A.சபாவதிப்பிள்ளை, A.கணபதி, C.பூலோகசுந்தரம், S. M. பொன்னையா, A.சங்கரப்பிள்ளை, S.K.வடிடீவல் ஆகியோர் சித்தமருத்துவப் பிரிவின் விரிவுரையாளர்களாக கடமையாற்றினர்.

**1961 ம் ஆண்டு** - கௌரவ சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமர் ஆனதும் 1961ஆம் ஆண்டு 31ம் இலக்க ஆயுர்வேதச் சட்டம் உருவாக்கப்பட்டது. இந்த சட்டமூலத்தின் பிரகாரம் சுதேச வைத்தியக் கல்லூரி ஆயுர்வேதக் கல்லூரியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அவ்வாறே சுதேச மருத்துவ சத்திர சிகிச்சை டிப்ளோமா எனும் பட்டம் ஆனது (D.I.M.S) ஆயுர்வேத மருத்துவ சத்திர சிகிச்சை டிப்ளோமா (D.A.M.S) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதைவிட ஆயுர்வேத திணைக்களம் உருவாக்கப்பட்டு அதன் முதல் ஆணையாளராக W. J. பெர்னான்டோ நியமிக்கப்பட்டார். ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் ஆயுர்வேத வைத்திய சபை, ஆயுர்வேத கல்வி ஆரோக்கியசாலைச் சபை, ஆயுர்வேத ஆராய்ச்சி சபை ஆகிய சபைகள் நிறுவப்பட்டு நிர்வாகம் நடைபெற்றது.

**1962 ம் ஆண்டு** - ஒக்டோபர் மாதம் 14 ம் திகதி நாவின்னவில் பண்டாரநாயக்கா ஞாபகர்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டு இந்தியப் பிரதமர் ஸ்ரீ ஜவர்லால் நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. சித்த மருத்துவப் பிரிவின் தலைவராக டாக்டர் S.M.பொன்னையா அவர்கள் கடமையாற்றினார். விரிவுரையாளர்களாக டாக்டர். S.K.வடிவேல், டாக்டர்.K.சங்கரப்பிள்ளை, திரு.K.C.தில்லையம்பலம் (விஞ்ஞான பாடங்கள்) ஆகியோர் கடமையாற்றினார்கள். 1962 ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது டாக்டர் K.சங்கரப்பிள்ளை அகாலமரணமானார். அதை தொடர்ந்து டாக்டர் S. அருணாசலம் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். ஆரோக்கியசாலையின் வெளிநோயாளர் பகுதியில் டாக்டர் N.கந்தையாவும் ஔடதபாகசாலையில் டாக்டர்.S.திருநாவுக்கரசும் இரசமருந்து செய்வதற்கு பொறுப்பாக டாக்டர்.S.குஞ்சிதபாதமும் கடமையாற்றினார்கள். டாக்டர்.S.M.பொன்னையா சித்த மருத்துவப்பிரிவின் தலைவராக இருந்த போது "திரவிய விஞ்ஞானம்" என்ற தலைப்பில் கையேட்டுப் பிரதியாக 7 தொகுதிகள் அடங்கிய ஒரு நூலை எழுதினார். இற்றைவரை ஆயுர்வேத திணைக்களம் அந்த நூலை வெளியிடவில்லை.

**1968 ம் ஆண்டு** - டாக்டர்S.M..பொன்னையா இளைப்பாறிய பின்னர் துறைவின் தலைவராகடாக்டர்.S.அருணாசலமும் விரிவுரையாளர்களாக டாக்டர்.T.குணரட்னம், டாக்டர்.S.திருநாவுக்கரசு ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.இவ் ஆண்டின் பிற்பகுதியில் டாக்டர்.S.அருணாசலம் பட்டமேற்படிப்பிற்காக குஜராத் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற போது டாக்டர் S.K.வடிவேல் சித்த பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

**1969 ம் ஆண்டு** - 1957 ம் ஆண்டு 49ம் இலக்கச் சட்டப்படி (தொழில் ஸ்தாபனச்சட்டம்) ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் நாவின்னயில் ஆரம்பிக்கப்பட்டது.

**1974 ம் ஆண்டு** - இவ் ஆண்டு டாக்டர்.S.K.வடிவேல் அவர்கள் இளைப்பாறியதும் மீண்டும் S.அருணாசலம் சித்த பிரிவின் தலைவரானார். 1974 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ம் திகதி டாக்டர்.S.பவானி சித்த மருத்துவப்பிரிவில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.

**1976 ம் ஆண்டு** - ஆயுர்வேதக் கல்லூரி தரமுயர்த்தப்பட வேண்டும் என்று அரசாங்கத்திடம்வைத்தியர்களால் கோரிக்கை ஒன்று முன் வைக்கப்பட்டது. பல விரிவுரையாளர்கள், மாணவர்கள் இது சம்பந்தமாக உணர்வு பூர்வமாக செயற்பட்டனர். இதற்கு யுனானி பிரிவின் தலைவராக இருந்த டாக்டர்.M.A.M.ஜலால்தீன் மிகுந்த சிரத்தையுடன் பாடுபட்டதும் அல்லாது கல்வி அமைச்சராக இருந்த டாக்டர் பதியுதீன் மொஹமட் அவர்களிடம் ஆயுர்வேதக் கல்லூரி தரமுயர்த்தப்பட வேண்டுமென வேண்டுகோளை முன் வைத்தார்.

**1977 ம் ஆண்டு** - சகலரதும் ஒற்றுமைப்பாட்டினால் 1977 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ம் திகதி ஆயுர்வேதக் கல்லூரி தரம் உயர்த்தப்பட்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கீழ் உள் நாட்டு மருத்துவ நிறுவனமாக தரமுயர்த்தப்பட்டது .நிறுவனத்தின் முதல் அத்தியட்சகராக பண்டிதர்.K.G.P.ஜயத்திலக நியமிக்கப்பட்டார். இது 1972 ம் ஆண்டு பல்கலைக்கழக சட்டம் 1ம் இலக்கத்தின் படி அரச வர்த்மானியில் பிரசுரிக்கப்பட்டது. பின்னர் உள்நாட்டு மருத்துவ நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு செயற்பட்டது. பல்கலைக்கழக நிர்வாக செயற்பாட்டிற்கு அமைய பாடவிதானம் மற்றும் கல்வி சார் நடவடிக்கைகள் மாற்றப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு புதிய மாணவர்கள் அனுமதிக்கப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

**1980 ம் ஆண்டு** - சுதேச மருத்துவத்துறைக்கு தனித்துவமான மந்திரிசபை அந்தஸ்து அற்ற சுதேசவைத்திய அமைச்சு (Project Ministry of Indigenous medicine) உருவாக்கப்பட்டது. அதன் முதல் அமைச்சராக ஆயுர்வேத மருத்தவப் பரம்பரையில் வந்த கௌரவ தர்மசேன ஆட்டிகலை அமைச்சராக நியமனம் பெற்றார்.

**1982 ம் ஆண்டு** - செப்ரெம்பர் மாதம் சகல சுதேச வைத்தியர்கள் மற்றும் மேலைத்தேச வைத்தியர்கள், பல்கலைக்கழக உயர்மட்ட அதிகாரிகள் அழைக்கப்பட்டு ஒரு பாடவிதானம் சம்பந்தமான செயற்பட்டடை ஐந்து நாட்கள் நடாத்தப்பட்டது. (Currculum work shop) இதற்கு பேராசிரியர் ஸ்ரான்லி கல்பகே (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர்.) பேராசிரியர் ஸ்ரான்லி விஜயசுந்தர (துணைவேந்தர் கொழும்பு பல்கலைக்கழகம் பேராசிரியர் G.C.N,ஜயசூரியா (அத்தியேட்சகர் உள்நாட்டு மருத்துவ நிறுவனம் டாக்டர் P.N.V.குறுப்பு (உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆயுர்வேத ஆலோசகர்) ஆகியோர் தலைமை தாங்கினர். இந்த செயற்பட்டடையில் எட்டிய முடிவுகளின் பிரகாரம் பாடவிதானம் தயாரிக்கப்பட்டது.

**1983ம் ஆண்டு-** இந்த சமயத்தில் ஆயுர்வேதப்பிரிவுத் தலைவராக டாக்டர்.M.S.P குறே வித்தியாசேகர அவர்களும் சித்தப்மருத்துவப் பிரிவின் தலைவராக டாக்டர்.S.பவானியும் யுனானி பிரிவின் தலைவராக டாக்டர்திருமதி.G.A..பவானியும் கடமையாற்றினார்கள். இந்த பாடவிதானம் டாக்டர் P.N.V. குறுப்பின் அனுசரனையடன் தயாரிக்கப்பட்டு கொழும்பு பல்கலைக்கழகத்தின் மூதவையால் 1983ம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது. இதன் பிரகாரம் சித்த மருத்துவமானி சத்திரசிகிச்சைமானி (B.S.M.S) பட்டப் படிப்பிற்கான முதல் அணி மாணவர்கள் 1983 ம் ஆண்டு சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

1983 யூலையில் நாட்டில் ஏற்பட்ட துரதிஷ்ட வசமான நிகழ்வினால் சித்தமருத்துவப் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர். சுதேச மருத்துவத்துறையின் வரலாற்றை நோக்கும் இடத்து மூவின மக்களும் இலங்கையின் பழம் பெரும் வைத்திய முறையை பாதுகாத்து வளர்த்துள்ளனர். இத்துறையின் முக்கிய அம்சங்களாக பின்வரும் விடயங்கள் காலத்தால் அழியாது இடம்பெற்றுள்ளன என்பது உறுதி.

1. சேர்.K.பாலசிங்கம் அவர்கள் சுதேசமருத்துவத்தை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே அதற்குரிய இடத்தை கொடுக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் செயற்பட்டது. அதற்கு அனுசரனையாக கௌரவ றொனால்ட்ஒபயசேகர, D.S.சேனநாயக்க போன்றவர்களின் ஒத்துழைப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2. 1925 ம் ஆண்டில் டாக்டா.J.பஸ்தியாம்பிள்ளை அவர்களால் இலங்கையில் சித்த வைத்தியக்கல்வியை போதிப்பதற்காக முதன்முதலில் யாழ்ப்பாணத்தில்லங்கா சித்தஆயுர்வேதக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டமை.

3. 1941 ம் ஆண்டு உள்நாட்டு மற்றும் சுகாதார அமைச்சராக இருந்த சேர் S.W.R.D.பண்டாரநாயக்கஅவர்களால் சுதேச வைத்தியம் அரச அங்கீகாரம் பெற்றமை.

4. 1961 ம் ஆண்டு 31ம் இலக்கச் சட்டப் பிரகாரம் கௌரவ.ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் ஆயுர்வேத திணைக்களம் சுகாதார அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டமை.

5. 1962 ம் ஆண்டு இந்நியப் பிரதமர் கௌரவ ஜவகர்லால்நேரு அவர்களால் பண்டாரநாயக்காஞபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டமை.

6. 1969 ம் ஆண்டு ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் நாவின்னவில் ஸ்தாபிக்கப்பட்டமை.

7. 1977 ம் ஆண்டு ஆயுர்வேதக் கல்லூரி பல்கலைக்கழக அந்தஸ்த்துக்கு உயர்த்தப்பட்டு உள்நாட்டு மருத்துவ நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டமை.

8. 1983 ம் ஆண்டு முதன்முறையாக B.S.M.S,B.A.M.S, B.U.M.S. ஆகிய பட்டப்படிப்பிற்கான முதல் அணி மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டமை.

9. 1990 ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் திகதி கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையில் சித்த மருத்துவ இறுதி வருட மாணவரின் செயன்முறைப்பயிற்சிக்காக மகப்பேற்ற விடுதி ஒன்ற திறக்கப்பட்டது.

10. 1991 ம் ஆண்டு தேசிய பாரம்பரிய மருத்துவ நிறுவனம் (National Institute of Traditional Medicine)நாவின்னவில் ஸ்தாபிக்கப்பட்டது.

11. 1995ம்ஆண்டு கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையை சித்த மருத்துவ மாணவர்களுக்காககொள்கையளவில் சித்த போதனா வைத்தியசாலையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## எதிர்காலத்தில் செய்யப்பட வேண்டியவை

1. இத்துறையை ஒரு பூரணத்துவமான சகல துறைகளுடனும் கூடிய நிறுவனமாவோ அல்லது பீடமாகவோ தரம் உயர்த்தப்பட வேண்டும்

2. சித்த மருத்துவ பட்ட மேற்படிப்புத்துறை ஒன்றை ஏற்படுத்துதல்

3. சித்த மருத்துவத்துறைக்கு தனியான ஆய்வு ஒழுக்க மீளாய்வு அனுமதிகுழு (Ethical Review Committee )ஒன்றை ஏற்படுத்துதல்

4. ஆராய்ச்சிகளை முதன்மைப்படுத்துவதற்கு ஏதுவாக ஆய்வு கூடம் ஒன்றை அமைத்தல்

5. சித்தமருத்துவம் சம்பந்தமானபாரம்பரியஉபகரணங்கள்,ஏடுகள்,கையெழுத்துப் பிரதிகள், உலர்தாவரங்கள் போன்றவற்றைச் சேகரித்து பாதுகாப்பதற்காக காட்சிச்சாலை ஒன்றை உருவாக்குதல்

## 25 ஆண்டுகளில் சித்த மருத்துவத்துறையின் சாதனைகள்

சித்தமருத்துவம் என்ற அடையாளத்தை யாழ்மண்ணில் தெளிவாகஏற்படுத்தியுள்ளோம்.

B.S.M.S. பட்டதாரிகளை உருவாக்கியள்ளோம். இவர்களில் பலர் அரச, தனியார் சேவைகள் மூலம் தமது பங்களிப்பை வழங்கி வருகின்றனர். சிலர் வெளிநாடுகளில் மூலிகை மருத்துவம் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

